69399

## புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] **1941-ம் ௵ பிப்ரவரி ௴ 8உ** [**ந. 30.**

பிரஸங்கம் **XXX.**

## விமான யுத்தத்தின் புதிய பிரச்னைகள்.

### வரப்போகும் கடும்புயல்.

உலகத்தில் இதுவரை ஏற்பட்டிராத ஒரு பெரிய முட்டுப்பாடு இந்த யுத்தத்தில் ஏற்பட்டிருக்கிறது. வலுவுச் சண்டைக்குச் சென்ற வல்லரசுகள் பிரிட்டனை தோற்கடிக்கத் தங்களால் இயன்றவரை முயற்சி செய்திருக்கிறார்கள். பிரிட்டன் தைரியமாகவும், பரபரப்பு இல்லாமலும் நிற்கிறது.

இந்த யுத்தம் துவங்குவதின்முன்னர் ஏதாவது ஒரு ஆபத்து வரப்போகிறது, யுத்தம் சம்பவிக்குமோவென்று சொன்னால் அதை நம்பாமல் தள்ளிவிடுகிறது வழக்கம். இப்பொழுது ஜெர்மானியர் செய்தாலும், செய்யாமல் சும்மாவிருந்தாலும், அதிலிருந்து பெரிய உபாயங்களின் பேரில் ஜெர்மானியர் அவ்வாறு செய்திருப்பதாக ஊகிக்கிறார்கள். இத்தகைய மனப்பான்மை நன்மையே. இதனால் நாம் எல்லோரும் ஜாக்கிரதையாகயிருப்பதற்கு ஹேதுவாகயிருக்கிறது.

வருகிற 2, 3 மாதங்களுக்குள் ஏதாவது ஒரு காரியம் நடந்தேறவேண்டும். ஹிட்லர் சும்மாவிருக்கமுடியாது. பிரிட்டனின்பேரில் ஒரு மகத்தான படையெடுப்பைத் தயாரிப்பதற்காகவே இப்பொழுது விமானப் படையெடுப்பில் குறைவு ஏற்பட்டிருக்கிறதோவென்று நினைக்கவேண்டியதாகயிருக்கிறது. கால நிலையறியும் ஜெர்மன் பண்டிதர்களும் கால நிலைகளை ஆராய்ந்து வருகிறார்கள். ஜயம் கிடைக்கும் அவகாசங்களை சர்ச்சை செய்கிறார்கள். வருகிற படையெடுப்பில் ஹிட்லர் விஷவாயுவை உபயோகிக்கலாமென ஒரு வதந்தி உலவுகிறது.

## காலநிலைச் சர்ச்சைகள்.

கால நிலைமையின் முற்போக்கைப்பற்றி ஜெர்மனியின் சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் கவனத்தைப்பற்றிய அநேக தகவல்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. பிரிட்டனிலிருப்பவை போன்ற நல்ல காலநிலையறியும் ஸ்தாபனங்கள் ஜெர்மனியிலிருந்தாலும், அட்லாண்டிக் மஹா ஸமுத்திரத்திலிருந்துதான் கால மாறுதல்கள் பெரும்பான்மையும் ஏற்படுவதால் பிரிட்டனுக்கு அவைகள் முதலில் தெரிந்து விடுகின்றன. இது பிரிட்டனுக்கு ஒரு பெரிய நன்மை. பிரான்ஸில் ஜெர்மன் காலநிலையறிஸ்தானங்கள் ஸ்தாபித்ததாக இன்னும் செய்தி கிடைக்கவில்லை.

## ஜெர்மன் விமானப்படையின் பரிமாணம்.

மேலும், ஹிட்லர் தன்னுடைய முழுபலத்துடன் தாக்குவான் என்று சொல்லப்படுகிறது. அவனுடைய முழு விமான பலத்தையும் கொண்டு தாக்குவான் என்று நினைப்பது தவறு. அவனுடைய முழு விமான பலம் என்பது 35,000 விமானங்கள் அடங்கியது என்று தெரிகிறது. முதல்தர பலம் என்பதற்கும் முழு பலம் என்பதற்கும் வித்தியாசம் உண்டு. ஜெர்மன் முதல்தர விமான பலம் 5,000, 6,000 விமானங்களடங்கியது. முழு பலம் என்பது இந்த முதல்தர பலமும், இன்னும் பல ரகங்களிலுள்ள விமானங்களுமுள்ளது. அவைகள் எல்லாவற்றையும் பிரிட்டனுக்கு அனுப்புவது பிரயோசனமில்லை. அவைகள் ஆங்கில சண்டை விமானங்கள், விமான எதிர்ப்பு பீரங்கிகளுக்கு நல்ல குறிகளாக ஆவதைத் தவிர வேறு உபயோகமில்லை. ஆகையால் ஹிட்லர் கூட்டப் படையெடுப்பு என்ற உபாயத்தைக்கொள்வதென்ருல், அந்தக்கூட்டத்தால் அவை ஆங்கில பீரங்கிகளுக்கு சுலபமான குறிகள் ஆகாத அளவுக்கு அவைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ளவேண்டும். அந்த அணிகளையும் ஒன்றன்பின் ஒன்ருக வெகு சீக்கிரமாக அனுப்பி, நாம் ஒரு தாக்குதலிலிருந்து ஸுதாரிக்குமுன் மற்ருெரு தாக்குதலைக் கைக்கொள்ளவேண்டும்; தொழிலாளிகளையும், போர்வீரர்களையும் தவிர, பிரிட்டனிலுள்ள எல்லா மனிதர்களையும் ஒன்றுசேர்த்து எப்படிப் படையெடுப்பினும், எவ்விதத்தில் எதிரி வந்தாலும் அவர்கள் பிரிட்டனில் கால்வைக்க முடியாதபடியும், கால் வைத்தால், ஒன்றுசேர்ந்து, அணிகளாக ஒழுங்கு செய்துகொள்ள முடியாதபடியும், அந்தந்த இடத்திலேயே அழித்துவிடும்படி திட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

## மின்னல் படையெடுப்பின் எல்லைகள்.

ஆகையால் கூட்டப் படையெடுப்பு ஸம்பாவிதமாகயிருந்தாலும், பதினாயிரக் கணக்காக விமானங்களை அனுப்புவது ஸம்பாவிதமல்ல. கூட்டப் படையெடுப்பு ஹிட்லருக்கு ஒரு புதிய உபாயமல்ல. சாவதான வரம்பிற்கு உட்பட்டு அதை பரீக்ஷை செய்து பார்த்துவிட்டான். சென்ற ஆகஸ்டு மாதம் நூற்றுக் கணக்காகவும், ஆயிரக் கணக்காகவும் விமானங்களை அவன் அனுப்பியது ஒரு கூட்டப் படையெடுப்பே. அந்த மாதத்திலேயே லண்டனில் பிரவேசிக்கவேண்டு

மென்பதற்காக அவன் அம்முயற்சி செய்தான். அதிலிருந்தே அவனுடைய முதல்தர பலம் 5,000, 6,000 விமானங்களுக்குமேல் இருக்க முடியாதென்று தெரியும். அந்த முதல்தர பலம் முழுவதையும் ஒரே தகுதியில் அனுப்புவானா, அல்லது 2, 3, அல்லது 5 தகுதியில் அனுப்புவானா என்று ஊகிக்கலாம். அநேகமாக 4, 5 தகுதிகளில் தாக்குவது ஸம்பாவிதம். ஒரே காலத்தில் ஆயிரம் விமானங்களை ஆகாயத்தில் நடத்துவது சிரம ஸாத்தியம். அதற்கும் அதிகமான விமானங்களை நிர்வஹிப்பது முடியாது.

## நிலப்படை உதவியின் அவசியம்.

சென்ற ஆகஸ்டு மாதம் ஹிட்லரின் படையெடுப்புப் பிரயத்தினம் வீணானதின் காரணம் என்னவென்றால் யுத்தத்தில் யந்திர ஸாதனமுள்ள நிலப்படைகளும், விமானப் படையும் ஒன்றுசேர்ந்து உழைக்கும் நாஸி தந்திரமானது பிரிட்டன்மீது அனுஷ்டிக்க முடியாததுதான். ஆங்கில மைதானங்களில் ஜெர்மன் மோட்டார் பீரங்கிகளும், ஆங்கில ஆகாயத்தில் கோயரிங்கின் விமானங்களும் ஒத்துழைக்க முடியவில்லை. ஆங்கிலச் சண்டை விமானங்களும், தரையிலுள்ள தற்காப்புகளும் நூற்றுக் கணக்கான ஜெர்மன் விமானங்களை வீழ்த்தின. ஆங்கிலரின் நிலப் பாதுகாப்புகளை கைகலந்துகொள்ள ஹிட்லர் ஒரு நிலப் படையை ஆங்கில பூமியில் இறக்கவேண்டும். நூற்றுக் கணக்கான ஜெர்மன் வெடி விமானங்கள் முன்வர, அவைகளைப் பாதுகாக்கும் சண்டை விமானங்கள் பக்கத்தில் வர, துருப்பு கொண்டுவரும் விமானங்களில் நூற்றுக்கணக்கான துருப்புகளைக் கொண்டுவந்து கூண்டுகள் மூலம் கீழே இறக்கலாம். போலந்தில் ஜெர்மானியரை எதிர்ப்பதற்கு முடியாமல் நிலைகுலைந்துபோனபடியால் இந்த உபாயம் அங்கு பலித்தது. பின்லாந்து யுத்தத்தில் ருஷ்யர்கள் இந்த உபாயத்தைக் கைக்கொண்டும் முடியவில்லை. அதிலிருந்து இப்பொழுது ஒரு வருஷமாகிறதாகையால் இங்கிலாந்தில் உள்ள ஒவ்வொரு தற்காப்பு ஸ்தானங்களுக்கும் கடற்கரை ரக்ஷகப் படைகளுக்கும் எவ்வாறு எதிரிகள் இறங்குவதை தடுப்பதென்பது விஷயமாக ஸாங்கோபாங்கமான எச்சரிக்கைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தூக்குத் தூக்காக ஆகாயத்திலிருந்து இறங்கும் எதிரிகளையும் கடலிலிருந்து கரையேறுபவர்களையும் உடனுக்குடனே அவர்கள் சரண் அடையாவிட்டால் கொன்றுவிடும்படிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு சேனையணியாக பரிணமிப்பதற்கு முன் அவர்கள் நாசம் செய்யப்படுவார்கள்.

## ஜெர்மானியருக்கு வெடிவிமானங்களின் பேரிலுள்ள பக்ஷபாதம்.

யுத்தத் துவக்கத்தில் நாஸிகள் வெடி விமானங்களை மட்டும்கொண்டு போர் புரிந்தார்கள். தற்காப்புகளில்லாத சிற்றரசுகளை பயமுறுத்த அவ்வாறு செய்தார்கள். போலந்தில் அந்த உபாயத்தைக் கைகொண்டார்கள். ஆனால் இங்கிலாந்து தேசம் சண்டை விமானங்களால் நிரப்பி, விமான வீழ்ச்சி பீரங்கிஸ்தானங்களையும் சீராக ஸ்தாபித்ததில், ஜெர்மனி தன் பழைய உபாயத்தைவிட்டு வேறு தந்திரம்

கடைப்பிடிக்க வேண்டிற்று. வெடி விமானங்களுடன் சண்டை விமானங்களை பாருக்கொடுக்க அனுப்பவேண்டியதாயிற்று.

நம்முடைய "ஸ்பிட்பையர்" ("அனல்கக்கிகள்") என்ற சண்டை விமானங்களை எதிர்ப்பதற்காக ஜெர்மனி தன் "110-சி. மெஸ்ஸர்ஷ்மிட்டு" என்ற சண்டை விமானத்தைச் செய்தது. அது பிரயோஜனப்படவில்லை. அது சண்டையில் நம் சண்டை விமானங்களுக்கு அருகே நெருங்கும்போது எதிரியின் துப்பாக்கி வீச்சுக்கப்பாலிருக்கும்படி ஓட்டப்படுகிறது. மேலும் அவைகள் துப்பாக்கிகளுக்கு பதிலாக பீரங்கிகள் வைத்துக்கொண்டிருப்பதால், நெருங்காமல் தூரத்திலிருந்தே தாக்குகின்றன. ஆகையால் அவைகளை திருப்பும்காலத்தில் அவைகளின் விலாப் பக்கங்கள் நம் துப்பாக்கி வீச்சுக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. அதனால் பல விமானங்கள் நம் சண்டை விமானங்களால் சுட்டு வீழ்த்தப்படுகின்றன. ஆகையால் ஜெர்மனி தன் வெடிவிமானங்களையே பிரதான பலமாகக் கொண்டு இருக்கிறது.

ஜெர்மன் வெடி விமானத்தின் வால் பக்கம்தான் அதன் வெகு பலக்குறைவான பாகம். வால் பக்கமிருக்கும் துப்பாக்கிக்காரரில் எத்தனையோ சுட்டு வீழ்த்தப் பட்டிருக்கிறார்கள். பிரிடிஷ் வெடி விமானங்களுக்கோ யந்திரஸூக்ஷமத்தால் ஓட்டப்படுகிற துப்பாக்கிமேடைகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. அவைகளை எந்தப் பக்கம் எந்தக் குறியில் வேணுமானாலும் விசையால் திருப்பி எதிரிச்சண்டை விமானங்களை சுடமுடியும்.

ஜெர்மன் விக்ஞான சாஸ்திரிகள் நம்முடைய தற்காப்பு விமானங்களின் சக்தியை அஸித்தி செய்ய பல உபாயங்கள் தேடிவருகிறார்கள். நாமோ, நம்முடைய தற்காப்பு விமானங்களின் சக்தியை விருத்தி செய்து வருகிறோம். ஆகாய விமானங்களுக்கு குண்டுகளால் துளைக்க முடியாத கவசங்களைக் கொடுக்க வேண்டும்; தீவிபத்தினால் தீங்கு நேராவண்ணம், பெட்ரோல் அறைகளைச் செய்து அமைக்கவேண்டும். இத்தகையான திருத்தங்கள் தேடி உபயோகித்து வருகிறோம். கூடிய சீக்கிரத்தில், நம்முடைய பாம்பர்கள் எதிரிகளுடைய தற்காப்பு விமானங்களை மீறி நிராகரித்துக்கொண்டு ஜெர்மன் ராணுவ ஸ்தானங்களின் பேரில் பாம்கள் வீழ்த்தும்போதுதான், நம்முடைய விமானங்களின் அதியாச்சர்யமான யோக்யதாம்சம் வெளிவரும்.

## சண்டை விமானக் கொள்கைகள்.

எதிரியுடன் போர் புரிந்த ஒவ்வொரு ஸந்தர்ப்பத்திலும் நம் விமானங்களே உயர்ந்ததாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மன் வெடி விமானங்களைக் காப்பாற்றுவதற்காக பின்பற்றிவரும் ஜெர்மானிய சண்டை விமானங்களுக்கு அவ்வளவு தூரம் பறக்கவேண்டிய எண்ணெயைச் சேகரிக்கக்கூடிய யத்தனங்களும் அவைகளை தவாராகாதபடி செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள் வெகு வேகமாகப் பறக்கக்கூடியவையாகையால், அவைகள் மெதுவாகப் பறப்பதாலும், இங்கிலாந்தையடைந்தவுடன் இங்கிலாந்தின் சண்டை விமானங்களை எதிர்க்கும் காலத்தில் தங்கள் பூர்ண சக்தியுடன் யந்திரங்களைத் திறந்து விட்டால் எல்லா

எண்ணையும் ஒரு நிமிஷத்தில் தீர்ந்து விடுகிறது. ஆகையால் ஜெர்மானியர் தங்கள் சண்டை விமானங்களை இங்கிலாந்து பிரதேசங்களுக்கு வந்து சண்டை போடக்கூடிய வசதிகளுடன் செய்யவேண்டியிருக்கிறது. பெரிய எண்ணெய் சேகரத்தைத் தாங்கக்கூடிய பெரிய விமானமாகச் செய்தால் ஆகாயத்தில் எல்லா வித சலனங்களுக்கு சிரமமாகயிருக்கும். இந்த கஷ்டமும் நம் விமானிகளின் தீரமும் எதிரியால் நிவர்த்திக்க முடியாதது. நம் வெடிவிமானங்களுடன் சண்டை விமானங்கள் செல்லுகிறதில்லை. படையெடுப்புத் துறைமுகங்களுக்கு நம் சண்டை விமானங்கள் ஏகதேசங்களில் போயிருக்கின்றன. வெகுதூரத்தில் சென்று எதிரியின் வெடிவிமானங்களை எதிர்ப்பதில் நம் "டிபயண்டு" என்ற சண்டை விமானம் வெகு உத்தமமானது. நன்றாகச் சண்டைசெய்வதுடன், ஜாஸ்தி எண்ணெய் சேகரித்து வைத்துக்கொள்ள முடியும்.

## உயரிய பிரிடிஷ் வெடி விமானங்கள்.

நம் வெடி விமானங்கள் யுத்தநடப்பின் கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து அவைகளைத் தடுக்கவேண்டிய விதத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் தானாகவே காப்பாற்றிக்கொள்ள சக்தியுள்ளவை. யந்திர ஸூக்ஷ்மத்தால் ஓட்டப் படும் துப்பாக்கிமேடை ஏற்றப்பட்டிருக்கிறது. அம்மாதிரி எதிரிக்குக் கிடையாது. தற்காலத்திய ஆகாயச் சண்டைகளில் வெகுவேகமாக வெகு நுட்பமான சலனங்களின் பேரில் யுத்தம் செய்யும்போது காற்று குமுறிகொண்டிருக்கும்போது நமக்கு வேண்டியபடி நம் பலத்தால் துப்பாக்கிகளைத் திருப்பமுடியாது: அதனால் யந்திரம் திருப்பும் துப்பாக்கிமேடை வெகு பெரிய நன்மை.

வெடி வீசும் உபாயங்களிலும் நூதனமான வழிகள் கண்டு பிடித்திருப்பதாகவும் தெரிகிறது. முழுகி வெடி வீசுதல், ஒரே வஸ்துவை குறி வைத்தல், பலர் சேர்ந்து ஒரு வரிசையாக வெடி வீசுதல், இவைகள் சாதாரணமாக கைக்கொள்ளும் வெடிவீசும் உபாயங்கள். ஆனால், அவைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஸங்கல்பம் இருக்கிறது. போக்கு வரவு ஸாதனங்களை முறித்து நிலப்படையை நிலை குலைப்பது ; எதிரியின் நில ஸ்தாபனங்களை அழிப்பது (உதாரணமாக வட ஆபிரிக்காவில் நடப்பதை கவனிக்கலாம்); "ஸாவதான ஸஞ்சாரம்" என்று சொல்லப்படும் ஸஞ்சாரங்களில் எதிரியின் கடல் விமான ஸ்தாபனங்களிலிருந்து கடல் விமானங்கள் புறப்பட்டு சுரங்கங்கள் கடலில் இடாவண்ணம், மேற்படி கடல் விமான ஸ்தலங்களை கொண்டிருக்கும் பார்காம், ஸில்ட், நார்டர்னி முதலிய துறைமுகங்களில் வெடிகள் வீசுவதும் நம் வெடி விமானப் படையின் சாதாரண வேலைகளில் சில.

## பிரிடிஷார்களின் முறை.

சென்ற 1940-ம் வருஷ ஏப்ரல் மாதம் முதல் பிரிடிஷ் பாம்பர்கள் ஜெர்மனியில் உள்ள ராணுவ ஸ்தானங்களின் பேரில் இடைவிடாது பாம்களை வீழ்த்திக்கொண்டு வருகின்றன.

சென்ற 1932-ம் ஹு அக்டோபர் மாதத்தில் காமன்ஸ் சபையில் மந்திரி பால்ட்வின் சொன்னதாவது :—

"யார் என்ன சொன்னாலும் சரி, பாம்பர்தான் ஜயத்திற்கு முக்கிய சாதனம். நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமானல், சத்துருவைக் காட்டிலும் அதிசீக்கிரமாக, நாம் வேலை செய்யவேண்டும். போரில் நாம் இழக்கும் ஜனங்களை விட ஏராளமான ஜனங்களை சத்துரு பக்கத்தில் நாம் நம்முடைய பாம்பர்களுக்கு இரையாக்க வேண்டும்." ஆனல், இந்த வாக்கியத்தின் உண்மையை நாம் முற்றிலும் அங்கீகரிக்கவில்லை. ஜனங்களைக் கொல்வதில் நாம் நம்பவில்லை. ஜெர்மனி தேசத்திலுள்ள ராணுவ ஸ்தானங்களையும், யந்திர சாலைகளையும், ரயில்வே ஸ்டேஷன்கள், கால்வாய்கள், துறைமுகங்கள், இவைகளை இடைவிடாது பாம்களால் தாக்கி, அவைகளை நாசம் செய்து விடுவதுதான் இறுதியில் நாம் ஜயிப்பதற்கு ஹேதுவாகும். ஆனல், ஜெர்மானியர்கள் வேறு முறையைக் கையாடிவருகிருர்கள். சண்டையில் கலக்காத இதர நகர, கிராமவாசிகள்பேரில் குண்டுகளை வீழ்த்தி வருகிருர்கள்; ஒருவிதமான பிளானும் இல்லை; தோணின இடத்தில் கண்மூடித்தனமாக கோர விளையாட்டு விளையாடுகிருர்களே ஒழிய, ஆழ்ந்த ஆலோசனையின்பேரில் அமைக்கப்பட்ட ஏற்பாட்டை அனுசரித்துப் போர் புரிவதாகத் தோன்றவில்லை. இதற்குக் காரணம் நம்முடைய ஆகாய விமான தற்காப்புப் படைகளின் ஸாமர்த்தியமே ஆகும்.

## தரைப்படைக்கும் ஆகாய விமானப்படைக்கும் உள்ள ஒத்துமை.

ஜெர்மானியர்களின் ஆகாய விமானப்படை, தரைப்படையுடன் ஒத்து பெல்ஜியம் முதலிய இதர தேசங்களின் பேரில் படையெடுப்பதற்காக வேண்டிய ஜெர்மன் ஆகாய விமானப்படை திட்டம் செய்திருந்தார்கள். அவ்விதம் ஒத்துழைத்த வரை ஜெர்மனிக்கு ஸாதகமாகவே இருந்து வந்தது. தரைப்படையின் ஒத்தாசை அல்லாமல் தனதிலே ஜெர்மன் ஆகாய விமானங்கள் போலண்டு தேசத்தின் பேரில் படையெடுத்த காலத்திலும் வெற்றி பெற்றது வாஸ்தவம். ஆனல், போலண்டு தரைப்படை ஸரியாக வகுக்கப்படாமல் இருந்தமையால் அது ஸாத்தியமாய் விட்டது. மேலும், போலண்டு தேசத்து ஆகாய விமானப்படையும் அலங்கோலமாக ஒழுங்கீனமாய் இருந்தது. ஸமபலமுள்ள ஆகாய விமானப்படையுடன் போர் புரியும்படி நேர்ந்தால், அப்பொழுது ஜெர்மன் ஆகாய விமானப்படையின் ஸாமர்த்தியமும் தெரிந்துவிடும். தரைப்படையுடன் ஒத்துப் போர்புரிவதில் பயிற்சி மிகவும் வேண்டும்; தேவையான பயிற்சி ஜெர்மன் படைக்குக் கிடையாது. முக்கியமாக, அமெரிக்கா தேசத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் "ஏர்-கோப்ரா" ("ஆகாய-நாகம்") என்று பெயர் பூண்ட ஆகாய விமானங்கள் அதிவேகமாய் பறக்கக்கூடியவை. அவைகளை எதிர்க்கப் போதுமான பலம் ஜெர்மானியர்களுடைய ஆகாய விமானங்களுக்குப் போதாது.

உதாரணமாக, கடற்சண்டையில் ஆகாய விமானங்கள் மிகவும் உபயோகமுள்ளவை. தரையில் ஸ்தாபித்திருக்கும் விமான நிலயங்களிலிருந்து ஆகாய

விமானங்கள் பறந்து சென்று தப்பித்துக்கொண்டு ஓடும் கப்பல்களை துரத்தி விடவும் மேற்படி சத்துருக் கப்பல்களின் பேரில் பாம்கள் போடும் விமானங்களைக் காப்பாற்றவும் மிகவும் இன்றியமையாதவை.

இத்தகையான ஒத்துமைப் போரின் லாபம் நாம் லிபியாவில் பார்த்தோம். பார்டியாவிலும் டொப்நக்கிலும், பாம் செய்யும் விமானங்களும், சண்டைக் கப்பல்களில் அமைக்கப்பட்டுள்ள பீரங்கிகளும் ஒத்து போர்புரிந்ததுதான், ஜெனரல் வேவல் தலைமையின் கீழ் தரைப்படைகள் ஜயிக்க முக்கியமான காரணமாய் இருந்தது. உண்மையில், ராணுவசரித்திரம் எழுதுபவற்கு லிபியாவில் நடந்தசண்டை போர்புரிவதில் ஓர் முக்கியமான தத்துவத்தை விளக்கிக்காட்டும். அதாவது, நிலப்படை, நீர்ப்படை, ஆகாயவிமானப்படை, இவைகள் ஏகோபித்து ஓர் தலைமையின் கீழ் போர் புரிந்தால், அத்தகைய யந்திரத்தால் அஸாத்யமான காரியம் ஒன்றும் இல்லை என்பதேயாகும்.

## ஜெர்மானியர்களுக்கு எட்டாத விஷயம்.

இத்தகையான பூர்ண ஒத்துழைப்பு ஜெர்மானியர்களுக்குக் கிடைக்க மாட்டாது. ஏனெனில் அவர்களுக்குப் போதுமான நீர்ப்படை இல்லை. இங்கிலாந்தின்பேரில் படை எடுப்பதில் ஜெர்மனி அசக்தமாய் இருப்பதற்கு முக்கியமான காரணம், கப்பற்படை அவர்களிடம் இல்லாததே.

இச்சங்கடத்தைத் தீர்க்க, இதர உபாயங்களும், ஆகாய விமானங்களுக்கு இதர உபயோகங்களும் தேடுகிருர்கள். கப்பற்சண்டை நேராமலே சூழ்ச்சி செய்து, சைனியத்தையம் இதர யுத்த சாதனங்களையும், ஆகாய விமானங்கள் மூலம் தூக்கிச் செல்வது என்றும், இங்கிலாந்தில் உள்ள தற்காப்பு சாதனங்களை திடீரென்று ஒரே கும்பலாய் ஆகாய விமானங்கள் மூலம் தாக்கி, அவைகளைச் சின்னபின்னமாகச் சிதறடித்துவிடுவதென்றும் ஜெர்மானியர்கள் யோசனை செய்கிருர்கள் என்று தோன்றுகிறது.

ஆனல், இம்முறை எவ்வாறு கைகூடும். பாம் செய்யும் விமானங்கள் சமகாலத்தில் ஏராளமாகவந்தால், அவைகளை எதிர்க்க நாம் தரையில் ஸ்தாபித்திருக்கும் பீரங்கிகளுக்கு மிகவும் சுலபமாக அவைகளைக் குறித்து குண்டுகள் போட ஹேதுவாகும். இதுவும் சென்ற ஆகஸ்டு, ஸெப்டம்பர் மாதங்களில் தெளிந்துவிட்டது. இருபத்தைந்து விமானங்கள் ஒரு கூட்டமாக வந்த காலத்திலேயே அவைகள், கீழே பூமியிலுள்ள பீரங்கிகளுக்கு மிகவும் சுலபமாய் குறி வைத்துத் தாக்க அனுகூலமாய் இருந்தது. ஏராளமாய் வந்தால் கேட்பானேன். ஒருக்காலும் சேர்ந்தாற்போல் ஆயிர விமானங்களுக்குமேல் வந்தது இல்லை. இனிமேல்வரும் சண்டையில் ஒரு தடவையில் 500 விமானங்களுக்குமேலாக, படையெடுத்துவரும் என்று நினைக்க இடமில்லை. ஹிட்லர் வசம் 6,000 விமானங்கள் இருந்தால், 500, 500-ஆக சுமார் பன்னிரண்டு கூட்டங்கள்தான் ஒன்றின்பின் ஒன்ருய் படை எடுத்துவர இயலும்.

## ஜெர்மன் ஆகாய விமானப்படை இங்கிலாந்தில் எதை சந்திக்கும்.

உள் நாட்டிலுள்ள முக்கிய ராணுவ ஸ்தானங்களை பாதுகாப்பதுதான் தற்காப்பு ஆகாய விமானங்களின் முக்கிய கருத்தாகும். லிட்டெல் ஹார்ட் என்பவர் சொல்வதுபோல், உள்நாட்டு ராணுவ ஸ்தானங்களை காப்பாற்றுவது தான் முதன்மையான காரியம். ஏற்கனவே நடந்த ஆகாயப்போரில் ஹரிகேன் களும், ஸ்பிட்பைர்களும் மிகவும் திறமையுடன் ஜெர்மன் விமானங்களை எதிர்த்தன. அப்போரில் ஜெர்மனியும் தோல்வியடைந்தது. ஆனால், நம்மிடம் மற்றும் பல பைடர் விமானங்கள் இருக்கின்றன. சென்ற 29—5—40-ல் நம்முடைய பைடர் விமானங்கள் எதிரிகளுடைய விமானங்களில் 38-ஐ சுட்டு வீழ்த்தின. அவைகளில் மிகவும் விலை உயர்ந்த விமானங்கள் 17-ம், பாம் போடும் விமானங்கள் 21. சென்ற ஆகஸ்டு மாதத்தில் ஜெர்மானியர்கள் 180-விமானங்கள் இழந்தார்கள் என்பது பிரஸித்தமான விஷயம். இதைக்காட்டிலும் ஆச்சரியமான ஸம்பவங்கள் ஏற்படக் கூடும். ஒரே தினத்தில் 180-க்கு மேலாகவே, எதிரிகள் விமானங்களைச் சுட்டு வீழ்த்த நமக்குத் திறமை உண்டு. ஜெர்மன் ஆகாய விமானப்படைகளுக்கு பிரமாதமாகப் புதிய சக்தி ஏதேனும் கிளம்பினால், ஒருக்கால் மகத்தான ஆபத்தி லிருந்து சற்று நிவர்த்தித்துக்கொள்ளலாம்.

## விமானியின் வீர்யம்.

நாம் இதுகால் விமானங்களைப் பற்றித்தான் ஆலோசனை செய்தோம். அவைகளைக்காட்டிலும் அவைகளை ஓட்டும் விமானிகளின் விஷயம்தான் மிகவும் முக்கியமானது. ஏராளமான ஜெர்மன் விமானிகள் வந்தும், அவர்களைக் காட்டிலும் மிகவும் குறைந்த ஆங்கிலேய விமானிகளை ஜயிக்க முடியாமல் ஜெர்மானியர்கள் பின் வாங்கிவிட்டார்கள் என்பது நன்கு அறிந்தவிஷயம்.

அமெரிக்கா தேசத்திலிருந்து நமக்கு ஏராளமான விமானங்கள் சீக்கிரத்தில் கிடைக்கப்போகின்றன. இங்கிலாந்திலேயோ நூற்றுக்கணக்கான விமானங்கள் புதிதாய் தயாராகிக் கொண்டிருக்கின்றன. அந்நிலைமையில்கூட, எவ்வளவு விமானங்கள் இருந்தாலும், ஒவ்வொரு விமானத்தையும் ஓட்டப் போதுமான திறமைவாய்ந்த விமானிகள் நம்மிடம் இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. சென்ற 18 மாதங்களுக்குமுன் சண்டை துவக்கவே, இங்கிலாந்தில் உள்ள தலைவர் கள் தீர்க்காலோசனை செய்து தீர்க்கதிருஷ்டி உள்ளவர்களாய், இத்தகையான தருணத்தையும், அவசியத்தையும் எதிர்பார்த்து ஏராளமான ஜனங்களுக்கு ஆகாயவிமானப் பயிற்சிகொடுக்க ஏற்பாடு செய்து விட்டார்கள்.

ஆகையால் ஹிட்லர் வருங்கால ரீதியையறிந்து, விருத்தியாகிக்கொண்டுவரும் நேசதேச பலத்தையுமறிந்து, விதியை வெல்லுவதற்காக ஒரு பெரும் பிரயத் தனத்தை எடுத்துக்கொள்ளுவான். விமானப்பலத்தில் தனக்கு மேற்பட்ட எதிரியை சந்தித்துவிட்டோமென்று கலங்குவான் என்பது திண்ணம்.

## அனுபந்தம்.

---

# எதிரியின் எண்ணெய் நிலைய தாக்கல்
# குறிகளை பிரிடிஷ் விமானிகள் தாக்கும் விதம்
# எதிர்கால நாசத்தின் மாதிரி
# ராணுவ நிலையங்களை திட்டப்படி தாக்குதல்

(விமான பங்கு தளகர்த்தர் எல். வி. ப்ரேஸர்.)

பிரிடனின் மனித, தளவாட, விமான சங்கியை அதிகரிக்க அதிகரிக்க, ஜெர்மனியின் தளவாடங்கள், தளவாடத் தொழிற்சாலைகள், போக்கு வரத்து சாதனங்கள் இவைகளைப் பிரிடிஷ் விமானப்படை இடைவிடாது நாளுக்கு நாள் அதிகமாகத் தாக்குவதைப்பற்றி வரும் செய்திகள் மிகவும் கவனிக்கத்தக்கவை. இன்று காலை நடத்திய தாக்கலைப்பற்றி வெகு சாரமான விவரங்கள் எனக்கு கிடைத்திருக்கிறது. ஏற்கனவே 6,000 தடவை தாக்கிய படையால் இந்த தாக்கலும் நடத்தப்பட்டது. எதிரி வசமுள்ள ஒரு எண்ணெய் நிலையம் அப்படி தாக்கப்பட்டது. நடு இரவிற்கு சற்று முன்னமே விமானங்களில் முதல் பகுதி நிலையத்தை அணுகி வெடிகுண்டுகளும், நெருப்பு குண்டுகளும் போட்டன. பெரும் வெடிப்புகளும், நெருப்புகளும் ஏற்பட்டன. பிறகு வேறு விமானங்கள் வந்து குண்டுகள் போட்டதில் சொக்கப்பானையாகிவிட்டது. இன்னும் பத்து நிமிஷத்தில் வேறு விமானங்களும் வந்து குண்டுகள் அக்கினி வாதை அதிகரித்தது. இன்னுமொரு பத்து நிமிஷங்களானபின் மற்றொரு விமானம் வந்து கம்பு போன்ற இரண்டு குண்டுகள் போட்டது. முதலாவது, குண்டு குறி நெடுகிலும் விழுந்து எண்ணெய் கிணறுகளுக்கு நெருப்பு வைத்தது. அது திரும்ப முன்னமே இன்னுமொரு விமான 'காப்டன்' உத்தரவிட்டு இன்னும் இரண்டு வெடிகுண்டுள்ள கம்புகள் இறைத்து அதே இடத்தில் மேற்கொண்டும் அக்கினியைக் கிளப்பினர். இவைகளால் ஏற்பட்ட நெருப்பின் வெளிச்சம் வட்டாரம் போட்டுக்கொண்டிருந்த இன்னுமொரு 'காப்டன்' வர இடங்கொடுத்தது. நெருப்பு குண்டுகளும், வெடிகுண்டுகளுமுள்ள இன்னும் இரண்டு கம்புகள் எறியப்பட்டு ஜாஸ்தி நெருப்பும், சேதமும் உண்டாயின. இன்னுமொரு விமானம் வந்தது. அதன் வேலைப் பயனாக ஒரு மைல் உயரம் புகை கிளம்பும்படி பெரிய வெடி ஏற்பட்டது. நெருப்பு 100 மைல் தூரம் தெரிந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் வந்த ஒரு விமானத்திலுள்ளவர்கள் 4 மகத்தான எண்ணெய் கொட்டகைகள் சொக்கப்பானையாக எரிந்து கொண்டிருப்பதாகவும், வேறு 4 கொட்டகைகள் எறிய ஆரம்பிப்பதாயும் சொன்னார்கள். குண்டுகள் வெடிக்க ஆரம்பித்தன; கடைசி விமானம் திரும்புமுன் அந்த நிலையம் முழுமையும் அக்கினி மயமாகிவிட்டது. 1 மைல் உயரம் புகை கிளம்பி, முரட்டு வெடி சத்தங்கள் உண்டாயின. மற்றொரு சமயம் அலுமினியம் தொழிற்சாலை நமது விமானிகள் குறியாக இருந்தது. பிரிடிஷ் விமான ராணுவ

நிலையத்திலிருந்து 700 மைல் தூரத்திலுள்ளது. இச்சமயமும் முன்னணி விமானம் நெருப்பை கிளப்பியது. இரண்டாவது விமானம் குண்டுக் கம்பு போட்டு பசுமை நிறமான நெருப்பைக் கிளப்பியது. சற்று நேரத்திற்கெல்லாம், வேறு விமானங்கள் வந்து மேற்கொண்டு நெருப்பைக் கிளப்பின. அதன் பிறகு சுமார் ஒரு மணி நேரம் வரை, அந்த சாலையை பூர்ண நாசம் செய்யவேணுமென்ற ஸ்பஷ்டமான உத்தரவு பெற்று விமானிகள் ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டிருந்தனர். தொழிற் சாலைகளும், கட்டடங்களும், புகைக்கூண்டுகளும் உடைந்துவிழ, அந்நிலையம் பூராவும் பெருஞ் சொக்கப்பானையாகப்பற்றி எரிவது பார்க்கப்பட்டது. காலை ஒரு மணிக்குத் தாக்கல் முடியவேண்டுமென்று ஏற்பாடு. கடைசி நிமிஷத்தில் கடைசி குண்டுகள் குறியின் நடு பாகத்தில் போடப்பட்டு ஒரு 'எலெக்டிரிக்' நிலையம் அழிக்கப்பட்டது. அலுமினியம் சாலையும் அழிக்கப்பட்டது.

பிரிடிஷ் விமான யுத்தம் இதுதான். ஜெர்மன் விமான யுத்தம் முழுதும் இப்படியல்ல. எங்கே, எப்போது, எதை அடிப்பது என்று தெரிந்து போர் புரிபவர் செய்யும் வேலை இது. "பூச்சாண்டி" காட்டும் வேலையல்ல. தாக்கல்கள் துவக்குமுன், சகல விவரங்களும் தெரிந்துகொள்ளப்படுகிறது. வேண்டிய புகைப்படங்கள் பிடிக்கப்படுகின்றன. இவைகளும் சில சமயங்களில் தாக்கல்கள் ஆரம்பிக்க சில மணி நேரங்களுக்குமுன் செய்யப்படுகின்றன. அதன்பேரில் மெயில் ரயில் வண்டிகள்போல் குறிப்பிட்ட டயத்தில் வெடிகுண்டு விமானங்கள் புறப்பட்டு பறந்துசென்று குறிப்பிட்ட நிலயத்தின் மேல்வந்து வட்டமிட்டு ஒவ்வொரு விமானத்திற்கும் ஏற்பட்ட தனிக்குறிப்புகளை தாக்கத்தயாராகின்றன. வெடிகுண்டுகளும் நெருப்புக்குண்டுகளும் போடப்படுகின்றன. ஒத்து உழைப்பாலும் முன் தயாரிப்பாலும் குறி தவருமல் அடிக்கிருர்கள். ஜனவரி 2-ம் வாரத்தில் பிரஸ்டு (Brest) என்ற ஊரை தாக்கப்போன விமானங்களில் குறி தவருமல் நூற்றுக்கு தொண்ணூத்திரண்டு விமானங்கள் போய்ச்சேர்ந்தன. பார்த்தவர்கள் விடுத்த செய்தி "குறி மேலில் குண்டுகள் போடப்பட்டன". உண்டாக்கப்பட்ட சேதமோ ஜாஸ்தி. ஆனுல், இதில் குறிப்பிடவேண்டிய விஷயம் என்னவென்ருல் குறி தவருமல் அடிக்கப்பட்டதென்பது. பிரிடனையும் அதன் கப்பல்களையும் தாக்க அந்தத் துறைமுகத்தை எதிரிகள் உபயோகித்து வந்தார்கள். இதேமாதிரிதான் ஹாம்பர்க், ப்ரெம்மன் மான்ஹீம், இப்போது கொஞ்சம் தலைமறைவாக இருக்கும் ஹாம், மான்ஹீமை எடுத்துக்கொள்ளுவோம். டிஸம்பர் மாதம் துவக்கத்தில் மான்ஹீம்பேரில் பிரிடிஷ் விமானங்கள் செய்த தாக்கலானது அவர்கள் இதுவரை செய்த தாக்கல்களுக்குள் வெகு சேதமுண்டாக்கிய தாக்கல். முக்கிய நிலையம் அடிக்கப்பட்டு சாமான் நிறைந்த ஐந்து படகுகள் முழுக்கப்பட்டன; சாமான் கொட்டகை சேதப்பட்டதால் பிரான்ஸிலுள்ள ஜெர்மன் துருப்புகளிடமிருந்து வரும் கடிதங்களில் பிரித்து எடுக்க அங்கிருந்த போஸ்டாபீஸானது ஸ்டட்கார்ட்டுக்கு மாற்றவேண்டியதாயிற்று. முக்கியமாக மான்ஹீமுக்கும் லட்டுவிக்ஸ்ஹேவனுக்குமுள்ள இருப்புப் பாதையானது உடைக்கப்பட்டு, இந்த வழியாக பிரான்ஸுக்குப்போகும் சாமான்கள்

எல்லாம் கார்ல்ஸ் ரூஹி (Karlsruhe) வழியாக அனுப்பப்பட்டன. இது ஜெர்மனிக்கும் ஜெர்மன் ஆக்கிரமித்திருக்கும் பிரான்ஸுக்கும் முக்கியமான இருப்புப்பாதைகளில் ஒன்று; மேலும் இதாலிக்கு நிலக்கரி கொண்டுபோகும் வழிபோல வடக்கேயிருந்து தெற்கே செல்லும் சாமான் வகையரா போக இது உயிர் நிலையான ஒரு மார்க்கம். பிரிடிஷ் விமானப்படை தாக்கிய மற்ற இடங்களைப்போலவே மான்ஹீமிலும் தாக்கப்பட்ட இடம் குறிவைத்தடித்ததின் கணக்கு எல்லாம் போற்றத்தக்கதாயிருந்தது. நாளுக்கு நாள் பிரிடிஷ் விமானப் படை ஜெர்மனியை ஜாஸ்தியாகத் தாக்குகிறது. நாள் ஆக ஆக அப்படை ஜாஸ்தி தூரம் சென்று ஆல்ப்ஸ் மலையையும் தாண்டி ஜெர்மனியின் உயிர் ஸ்தானம் வரை வியாபிக்கிறதாக செய்தி வருகிறது. இவ்வித தாக்கல்களால் எதிரிக்குச் சேதம் கணக்கிடமுடியாது; ஆனால், இத்துடன் நிற்காது; ஜெர்மனியின் கிழக்குப் பாகங்களில் மறைத்துவைக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள் நிர்த்தாக்ஷண்யமாகத் தாக்கப்பட்டு ஐரோப்பா கண்டத்தின் கீழ்பாகம் எப்படி நாசமாக்கப் படுமென்று இம்மாதிரி காட்டுகின்றன.

---

# வார யுத்தச் செய்திகள்.

(30—1—41 லிருந்து 5—2—41 வரை).

## எரிட்ரியா: அகோர்டாட், பாரெண்டு பிடிபட்டன.

செங்கடலில் இதாலியருக்குச் சொந்தமான மஸாவா, அஸ்ஸாப் என்ற துறைமுகங்களைப் பிடிக்க இரண்டு பக்கங்களிலிருந்து பிரிடிஷ் துருப்புகள் எரிட்ரியாவுக்குள் படையெடுத்துச் செல்லுகின்றன. மஸாவாவுக்குப் போகும் ரெயில் பாதையிலிருக்கும் அகோர்டாட், பாரெண்டு என்ற ஸ்தலங்களைப் பிப்ரவரி 1, 2 தேதிகளில் பிடித்தாய்விட்டது. இவைகளுக்கு 50 மைலுக்குக் கிழக்கே இருக்கும் கீரான் என்ற இடமும் எதிர்க்கப்பட்டுவருகிறது. எரிட்ரியாவில் 4-ல் ஒரு பங்கு பிடித்தாய்விட்டது.

இந்த யுத்தத்தில் இந்தியத் துருப்புகள் விசேஷமாகச் சண்டை செய்து வருகின்றன. இதாலியர்கள் பின்வாங்கி ஓடும்போது வெடிகளைக்கொண்டு ரஸ்தாவில் பெரிய ஒரு பள்ளத்தை உண்டாக்க, இந்திய ஸாபர்ஸ்-மைனர்ஸ் சைனியமானது வெகு விரைவாக ரஸ்தாவைச் சீர்படுத்தி, பிரிடிஷ் சைனியத்தைப் பின்தொடரச் செய்தது.

## லிபியா.

1. டெர்னாவுக்கு 50 மைலுக்கு மேற்கேயுள்ள சைரினி பிடிக்கப்பட்டது.

2. எல்லைக்கு 40 மைல் உள்ளேயிருக்கும் அபலோனியா எதிரியால் காலி செய்யப்பட்டது.

3. டொப்ருவுக்கு தெறகேயுள்ள எல்-மெகிலி என்ற ரெயில்வே ஸ்டேஷன் வளைக்கப்பட்டுவிட்டது.

4. பார்ஸியும் காஸ்டல்-பெனிடோவும் விமானங்களால் தகர்க்கப்பட்டன. பார்ஸியானது பெங்காஸிக்குப் போகும் ரெயில்பாதையிலிருக்கிறது காஸ்டல்-பெனிடோவானது திருபோலியில் ஒரு முக்கிய ராணுவ ஸ்தலம்.

5. லிபியா பாலைவனத்தின் நடுவில் பெஸ்ஸாவென்ற சுபிக்ஷமான இடத்துக்குத் தலைநகரானது மூர்ஸூக். இங்கேயிருந்து இதாலியர்கள் விமானங்களைக்கொண்டு பூமத்திய-மேற்கு-ஆபிரிக்காவை எதிர்ப்பதுண்டு. சாடிலிருந்த பிரி-பிரெஞ்சு, சைனியங்கள் ஜெனரல் லார்மிளுட் தலைமையின்கீழ், படையெடுத்து மூர்ஸூக்கைத் தாக்கின.

பெங்காஸிக்குப் பிரிடிஷ் சைனியம் போவதைத் தடுக்க ஜெர்மன் விமானங்கள் லிபியாவுக்கு வந்திருக்கின்றனவாம்: காலம் தவறிவிட்டது: இனித் தடுக்க முடியாது. ஸொல்லத்தையும், பார்டியாவையும், வட ஆபிரிக்காக் கரையில் பிரிடிஷ் வியாபாரக் கப்பல்களையும் விமானங்களைக்கொண்டு எதிர்த்ததாக இதாலி சொல்லிக்கொள்ளுகிறது.

அபிசீனியாவுக்குள்ளிருக்கும் எல்-தூழ, கோரே, ஹோபாக் என்ற மூன்று இடங்கள் பிடிக்கப்பட்டன. டானு ஏரிக்கரையில் இருக்கும் இதாலியர்கள் எதிர்க்கப்பட்டுக் கஷ்டப்படுகிறார்கள்.

இதாலிய-ஸொமாலிலாண்டுக்குள்ளாக 40 மைல் தூரம் பிரிடிஷ்-துருப்புகள் முன்னேறிவிட்டன. அடிஸ்-அபாபாவிலிருந்து ஜிபூதிக்குப்போகும் ரெயில்பாதையில் இருக்கும் எய்ஷா வென்றவிடம் விமானங்களால் படையெடுக்கப்பட்டது.

அல்பேனியா. கிளிஸூராவிலிருந்து, பேராட்டுக்கும், வலோனுவுக்கும் போகும் பாதையிலிருக்கும் 6,000 அடி உயரமுள்ள டிரேபெஷனி யென்ற மலைச்சிகரத்தை கிரேக்கியர்கள் பிடித்துக்கொண்டார்கள்.

சைனு.—வட கிழக்குச்சைனுவில் 100,000 சைனுத் துருப்புகளை ஜப்பானியர் எதிர்த்ததாகச் சென்றவாரம் சொல்லப்பட்டது. இந்தப் போரில் இருதிறத்தாரும் ஜயித்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஜப்பான் தோற்றுவிட்டதாக சைனு சொல்லுகிறது. சைனு சைன்யத்தை நிர்மூலமாக்கிவிட்டதாக ஜப்பான் சொல்லிக்கொள்ளுகிறது.

## விமான-எதிர்ப்புகள்.

1. இதன் விவரம் அட்டவணைகளில் பார்க்கலாம்.

2. குளிரினால், இந்த வாரத்தில் ஐரோப்பாவில் ஒரு இடத்திலும் அதிகமாக விமானப் போர் கிடையாது. பிரிடன்மேல் படையெடுப்பே இல்லையென்று சொல்லலாம். ஆனால் ஜெர்மனியிலுள்ள வில்லெம்ஸ்ஹேவன்மேல் பிரிடன் வெகு

கடுமையாய்ப் படை எடுத்தது. இனி பிரிடிஷ் எதிர்ப்புகள் உக்கிரமாயிருக்குமென்றும், அவைகளை ஜெர்மன் நில பீரங்கிகள் அதிகமாய் தடுக்கமுடியாதென்றும் ஜெர்மன் கப்பல் படைத் தலைவரான ரீடரும், நிபுணரான எர்ஹார்ட்-மில்சும் ஜெர்மனிக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

## பிரிடனுடைய ஆகாயப் படையெடுப்பு.

3. இந்த மாதம் 2-ம் தேதியன்று 100 சண்டை விமானங்கள் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து பிரெஞ்சுக் கடற்கரைக்கு வந்து இடைவிடாது 24-மணி நேரம் பறந்துகொண்டுவந்தன. இதைப்பார்த்த ஜெர்மன் விமானங்கள், எதிர்க்காது, ஒதுங்கிவிட்டன. இதிலிருந்து பிரிடிஷ் விமானப் படையெடுப்பு ஆரம்பித்துவிட்டதாகச் சொல்லலாம். இனி ஜெர்மனி சொல்லிக்கொடுத்த பாடம் திருப்பி வாசிக்கப்படும். சென்ற வருஷம் ஜெர்மனி பெரிய விமானப்படையைக் கொண்டு பிரிடனைத் தாக்கிற்று. சிறிய விமானங்களைக்கொண்டு பிரிடன் தன்னைக் காப்பாற்றிக்கொண்டது. இனி பிரிடனும், விமானப் படையெடுத்து எதிரியைத் தாக்கும்.

**வேவு.**—இந்த வாரத்தில் பிரிடனுக்குப் பறந்துவந்து ஜெர்மன் விமானங்கள் வேவு பார்க்கின்றனவாம். சென்ற அக்டோபரில் நடந்ததுபோல இனி ஜெர்மன் விமானங்கள், இரவும் பகலும் எதிர்க்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**பிரான்ஸ்** :-கிறிஸ்மஸ் சமயத்தில் பிடேன் அனுப்பிய சமாசாரத்துக்கு ஹிட்லர் சந்தோஷமற்ற பதில் ஒன்றை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. லவால் மறுபடியும் பிடேன் கவர்ன்மெண்டுக்குத் திரும்பிவருவாரென்று வதந்தி கிளம்பியிருக்கிறது. வட-ஆபிரிக்கப் பிரஜைகளை பிடேனிடத்தில் விச்வாஸம் வைக்கவேண்டுமென்று ஜெனரல் வேகாண்டு ஒலி பரப்பியிருக்கிறார். பிரான்ஸுக்கு விபரீதமான காரியம் ஒன்றையும் இப்பொழுது ஹிட்லர் செய்து விடுவாரென்று நினைக்க இடமில்லை. பயமுறுத்தலாம். மெட்ராஸ் மெயில் சொல்லுகிறபடி பிரான்ஸ் தோற்றாலும், தோல்வியடையாத சைனியம் ஒன்று பிடேன் கையில் இப்பொழுதுமிருக்கிறது. அது இருக்கும்வரையில் பயமில்லை. விஷியினுடைய தற்கால நிலைமையைப்பற்றி, சில அபிப்பிராயங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன :—

**அல்காஸர்.**—வம்பு இழுத்துக்கொள்ளுவதில் ஜெர்மனிக்கு லாபமொன்றும் இல்லை.

**எ-பி-ஸி.**—பிரான்ஸைப்பற்றி ஜெர்மனி ஒரு முடிவுக்கு இப்பொழுது வந்தாகவேண்டும்.

**அரிபா.**—இந்த இரண்டு தேசங்களும் ஒத்துழைப்பது சந்தேகம்தான்.

**ஸண்டே எக்ஸ்பிரஸ்.**—திடீரென்று பிரான்ஸ் தேசம் முழுவதையும் ஜெர்மனி பிடித்துக்கொள்ளலாம்.

**ஸண்டே டைம்ஸ்.**—ஜெர்மன் ஆதிக்கத்தில் பாரிஸிலிருக்கும் பத்திரிகைகள் சொல்லுவதைப் பார்த்தால் ஜெர்மனி பிரான்ஸுக்கு யுத்தத்துக்காக இறுதிக் கடிதம் சீக்கிரம் அனுப்பிவிடலாம்.

**அப்ஸர்வர்.**—மத்தியதரைக்கடலை சுவாதீனப்படுத்திக்கொள்ள ஹிட்லர் முயற்சிப்பதாகத் தெரிகிறது.

**தேசிய ஜனபிமான இயக்க** மொன்று பிரான்ஸில் கிளம்பியிருக்கிறது. இது பிடேனைக்கவிழ்க்கச்செய்யும் பிரயத்தினமாயிருக்கலாம். இதன் நோக்கங்களைப் பார்த்தால் இது ஜெர்மானியர்கள் கிளப்பிவிட்டதாகத் தெரிகிறது. இதன் நோக்கங்களாவன :—1. ஐரோப்பிய புது அமைப்பில் பிரான்ஸைச் சேர்ப்பது. 2. பிரான்ஸும் ஜெர்மனியும் சேர்ந்துகொண்டு ஆபிரிக்காவைப் பிடிப்பது. 3. ஜனசமூகத்தைக் கலப்பில்லாது செய்தல். 4 சரீர, ஆத்ம புனருத்தாரணம். 5. பொருளாதாரச் சீர்திருத்தம்.

**ஹிட்லரின்-பயித்தியக்காரப் பேச்சு.**—பொல்லாதவர்கள் வெறிபிடித்து மடிவார்கள் என்று சொல்லுவதுண்டு. ஹிட்லருடைய வியாதிச்சின்னங்களைப் பலநாட்களாக கவனித்து வந்த லண்டன் வைத்திய நிபுணர் ஒருவர் ஹிட்லருக்கு நரம்புத் தளர்ச்சியால் உண்டாகும் பயித்திய வியாதி பிடித்திருப்பதாக முடிவுக்கு வந்து இருக்கிறார். இந்த வியாதி பிடித்தவர்களுக்கு முதலில் நன்றாய் மூளை வேலை செய்து அபூர்வ காரியங்களைச் செய்வார்கள். ஆனால் சீக்கிரத்தில் பயித்தியம் பிடித்து இறந்துபோவார்கள். இவர் அதிகாரத்துக்கு வந்த எட்டாம் வருஷக் கொண்டாட்டம் ஸ்போர்ட்ஸ் பிளாட்ஸ் மண்டபத்தில் நடந்தபோது இவர் பேசியது பேத்தலாய்த்தான் இருந்தது. வழக்கம்போல், பொய்யும், பயமுறுத்தலும், படாடோபமும் நிறைந்ததாயிருந்தது.

## 1. பொய்.

1. சென்ற யுத்தத்தில் ஜெர்மனி தோற்றுப்போகவில்லை.

2. ஜெர்மானியர்கள் நாஸி தத்துவத்தைச் சரியென்று அறிந்து கைப்பிடித்தார்கள்; கட்டாயப்படுத்தப்படவில்லை.

3. பிரிடனுக்கும் எனக்கும் மனஸ்தாபத்துக்கிடமேயில்லை.

4. இதாலியருக்குச் சில சிறு விபத்துக்கள்தான் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் முஸோலினியை விட்டு இதாலியர்கள் பிரிந்து விடமாட்டார்கள்.

## 2. பயமுறுத்தல்.

1. பக்குவ காலத்தில், பலமாய் எதிர்ப்பேன்.

2. என்னுடைய டார்பிடோக்களால் எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் தாக்குவேன்.

## 3. படாடோபம்.

ஹிட்லர் பேசியபின், டாக்டர் கோயபல்ஸ் 'ஹிட்லர் பிதாவே, கட்டளையிடுங்கள், நாங்களதைத் தலைமேல்கொண்டு, உங்களைப் பின்பற்றுகிறோம்' என்றார். அந்த சமயத்தில் முஸோலினியிடமிருந்து சகோதர-உபசாரம் வந்தது. 'நாம் இணைவிடாது தோளோடு தோளாய் நிற்போம்' என்று ஹிட்லர் பதில் அனுப்பினார்.

### அமெரிக்கா, பிரிடனுக்குக் கடன் கொடுக்கும் மசோதா (திருத்தப்பாடுகள்.)

பிரிடனுக்கு 20,000 லக்ஷம் டாலர்களுக்கு மேல் கடன் கொடுக்கக்கூடாது என்று வந்த திருத்தம் தோற்றுப்போயிற்று. 1943-ம்வருஷம் ஜூன் 30-ல் மசோதா செல்லாதென்றும், காங்கிரஸுக்கு அடிக்கடி ரிபோர்ட்டு அனுப்புவதைப்பற்றியும், ராணுவ இலாகாக்களைக் கலந்துகொண்டுதான் யுத்த தளவாடங்களைக் கொடுக்க வேண்டுமென்ற திருத்தங்கள் ரகஸியமாய் வோட்டுசெய்யப்பட்டன.

மாஜி-யுனைடட்-ஸ்டேட்ஸின் ஜெர்மன்-ஸ்தானிகரான ஜேம்ஸ்-ஜிரார்ட் என்பவர் ஜெர்மனிமேல் படையெடுக்கவேண்டும்; பிரிடன் தோற்றால் ஜெர்மனி மெக்ஸிகோவைப் பிடித்துக்கொள்ளுமென்றார்.

வஸந்த காலத்தில் படையெடுப்பதற்காக ஜெர்மனி சீதோஷ்ண ஸ்திதியைக் கவனித்து வருவதாயும், புதுமாதிரியான விமானங்களைக்கட்டி, பழய விமானங்களைக் காட்டிலும் நன்றாய்ச் சண்டை செய்ய ஜெர்மனி யோஜிப்பதால் பழய மாதிரி விமானங்களை அதிகமாய்க் கட்டவில்லை என்றும், கனடா வழியாக வந்து ஜெர்மனி யுனைடட் ஸ்டேட்ஸைப் பிடித்துக்கொள்ளக்கூடுமென்றும், ஆகவே வெகு சீக்கிரத்தில் மசோதாவானது பாஸ் செய்யப்படவேண்டும் என்றும் கர்னல் பிராங்கு நாக்ஸ் அபிப்பிராயம் கொடுத்தார்.

இதைப்பற்றி வியாக்யானம் செய்யும்போது ஹலிபாக்ஸ் பிரபு ஜெர்மனியிலும், இதாலியிலும், பால்கன் நாடுகளிலும் நிலைமை சரியாயில்லாததால் சீக்கிரத்தில் ஹிட்லர் ஏதாவது ஒரு பக்கம் படையெடுத்துத்தான் ஆகவேண்டும் என்றார்.

. பிரதிநிதி சபையில் சர்ச்சையைத்துவக்கிய மிஸ்டர் அடால்ப-ஜெ-சபாத் மசோதாவானது அமெரிக்காவின் பாதுகாப்புக்கென்றார்.

மசோதாவை எதிர்த்த மிஸ்டர் ஹாமில்டன்பிஷ் மசோதாவின் முடிவாக 6 மாதங்களுக்குள்ளாக அமெரிக்கா, ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் சண்டைக்குப் போகநேரிடுமென்றார்.

யுத்தத்துக்குப் போவதும் போகாததும் பிரஸிடெண்டு ஒருவரே தீர்மானிப்பதாக பில் தயாரித்திருக்கிறது என்று மிஸ்டர் லா-பொலெட் சொன்னார்.

பில்லானது பாஸ் ஆனவுடன் அமெரிக்காவானது ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களில் சண்டைக்குப் போகவேண்டி வருமென்றார்.

மசோதாவுக்கு அநுகூலம் செய்ய மிஸ்டர் வெண்டல் வில்கீயை பிரிடனில் இருந்து உடனே புறப்பட்டு வரும்படி மிஸ்டர் கார்டல்ஹல் கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

**பொருளாதார-முற்றுகை.**—அமெரிக்காவிலிருந்து நேராக ஜெர்மனிக்கு ருஷ்யா வழியாக சரக்குகள் போகாமல் போனாலும், 1940-ல் அமெரிக்காவிலிருந்து ஏராளமாக சாமான்கள் ருஷ்யாவுக்கு ஏற்றுமதியாகி இருக்கின்றன. உதாரணமாக பருத்தி 30,000 டன் (3 மாதங்களில்), தாம்பிரம், பித்தளை 57,000 டன் (11 மாதங்களில்), கோதுமை 10,000 டன் (11 மாதங்களில்), மண்ணெண்ணெய் கிணறுகள்-தோண்டும் யந்திரங்கள் 1938-ஐ விட இரண்டு பங்கு (8 மாதங்களில்).

இந்த மாதிரி சாமான்களை ஜெர்மனிக்கு விற்க ருஷ்யா உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறது.

தென் அமெரிக்காவிலிருந்தும் ஏராளமான சரக்குகள் ருஷ்யாவுக்கு வந்து கொண்டிருக்கின்றன.

சைனாவிலிருந்து டங் எண்ணெய் ஏராளமாக ருஷ்யாவுக்குப் போய்க்கொண்டு இருக்கிறது. போர்ச்சுகீஸ் குடியேற்ற நாடுகளிலிருந்து சரக்குகள் அளவுக்கு மிஞ்சி லிஸ்பன் துறைமுகத்தில் வந்து இறங்குகின்றன. இவைகள் முடிவில் ஜெர்மனிக்குப்போகலாம்.

இவைகளைப் போகாது தடுக்க, பேச்சுக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அமெரிக்கா சம்பந்தப்பட்ட வரையில் ஏற்றுமதிச் சரக்குகளுக்கு லைஸென்ஸ் ஏற்படுத்தி, அயல் நாட்டு பணங்களையும் இறுக்கிவிடலாம்.

**ஜப்பானனது** தூர-கிழக்கு தேசங்களுக்கு மத்தியஸ்தம் பேசுகிறது. அதற்கு பிரெஞ்சு-இந்து-சைனாவும், தாய்லாண்டும் சம்மதித்து தங்கள் சண்டையை நிறுத்திவைத்திருக்கின்றன. ஜெர்மனியின் பலவந்தத்தால் பிரான்ஸூம் இதற்கு சம்மதித்திருக்கிறது. வெகுநாளாக தாய்லாண்டிடத்தில் ஜப்பானுக்கு அபிமான முண்டு. ஆகவே இப்பொழுது பிரான்ஸூக்குப் பிரதிகூலமாக ஜப்பான் மத்தியஸ்தம் செய்யலாம்.

மீன்பிடிக்கும் பாத்தியத்தை ஜப்பானும் ருஷ்யாவும் பலவருஷங்களுக்கு திட்டப்படி பங்கிட்டுக்கொள்ளுவதற்கு ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளப் பேச்சு நடக்கிறது. ஜப்பான் சாமான்களை ருஷ்யாவின் வழியாக ஜெர்மனிக் கனுப்பவும் ஏற்பாடுகளாய்க் கொண்டிருக்கின்றன.

நெதர்லண்ட்ஸ்-ஈஸ்ட்-இண்டீஸை, கிழக்கு ஆசிய-புது-அமைப்புக்குள் இழுக்க ஜப்பான் செய்த யத்தனம் பலிக்கவில்லை. இந்த தேசத்தின் கவர்ன்மெண்டு இப்பொழுது லண்டனில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஸ்வதந்திரத்துக்கு ஹானி வருமாதலால் இந்த நெதர்லண்ட்ஸ் அரசாங்கம் சம்மதம் கொடுக்க மறுத்துவிட்டது. ஜப்பானோ, நெதர்லண்ட்ஸ்-ஈஸ்ட்-இண்டீஸின் தலைநகராகிய படேவியாவோடு பேசப் போவதாயும், லண்டனிலிருக்கும் அரசாங்கத்தை மதிக்கப் போவதில்லை யென்றும் சொல்லிக்கொள்ளுகிறது.

ஜெர்மானியர் ஆக்கிரமித்த நாடுகள்: போலண்டு—25,500 லக்ஷம் டாலர்கள் பெறுமான சொத்தையும் பிடுங்கிக்கொண்டு, மேலும் 700,000 டன் நிறையுள்ள தான்யங்களைக் கொடுக்க போலண்டைக் கேட்கிறார்கள். 16-வயது முதல் 50 வயது வரையுள்ளவர்களை யெல்லாம் ஜெர்மனிக்கு கட்டாய வேலைக்குப் போகச் சொல்லுகிறார்கள். 3000 போலிஷ் பாதிரிகள் ஜயிலில் அடைக்கப்பட்டு, அவர்களில் 700 பேர் சுடப்பட்டிருக்கிறார்கள்.

பிரிடன். ட்ரேட்ஸ் யூனியன் காங்கிரஸூம், எம்பிளாயர்ஸ் கான்பெடரேஷனும் அனுப்பும் பிரதிநிதிகளடங்கிய கமிட்டி ஒன்று தொழில் இலாகா மந்திரிக்கு கட்டாயத்தொழில் சம்பந்தமான யோசனைகளைச் சொல்லும். பிரிடனிலிருக்கும் ஸ்திரீகள் எல்லாம் முக்கியமான தொழில்களைச் செய்ய கட்டாயப்படுத்தப் படுவார்கள். கல்யாணமில்லாதவர்கள் முதலாகப் பொறுக்கப்படுவார்கள்.

---

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 27—1—41. (திங்கட்கிழமை). | | | |
| | **அல்பேனியா (Albania)** | | |
| | ராணுவ கட்டடங்கள்.—எல்பாஸான் (Elbasan). | நஷ்டமில்லை. | பலத்த சேதம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ரயில்வே ஸ்டேஷன்கள்.—எரிடிரியா(Eritrea)வில் கெரன் (Cheren); அபிஸீனியா (Abyssinia)வில் அய்சா (Aicha). | ...... | ...... |
| | ரயில் பாலம், ரோட்டு.—அதார்தி(Adarte)க்குக் கிழக்கே. | ...... | பாலம் உடைந்து போயிற்று. |
| | விமானங்கள் இறங்குமிடம்.-லிபியா(Libya)விலிருக்கும் அபலோனியா(Apollonia). | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 27—1—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)**—தொடர்ச்சி. | | |
| | லிபியாவிலிருக்கும் கடற்விமான நிலயம்.—பொம்பா (Bomba). | ...... | 7 கடல் விமானங்கள் ஒரே நாசம். |
| | மொயாலே (Moyale) பிரதேசம். | நஷ்டமில்லை. | ...... |
| | **இதாலி (Italy).** | | |
| | கபோடிசினே (Capodichino) விமான நிலயம், முக்கியமான ரயில்வே ஜங்க்ஷன், ராணுவப்பயிற்சி செய்யுமிடம்.-நேபிள்ஸ் (Naples). | ...... | தீயும், வெடிச் சத்தங்களும் கிளம்பின. கட்டடங் களுக்குச் சேதம். |
| | விமான நிலயம்.—கடானியா (Catania). | ...... | 1 விமானம். |
| | கட்டடங்கள்.—கோமிஸோ (Comiso). | ...... | நாசமாயின. |
| 28—1—41 (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | போக்குவரத்து சாதனங்கள்.-அல்பேனியா (Albania)வில் இதாலியரின் பின்னணியில். | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | காவல்கார்த்தல்.—முன்னேறும் பிரிடிஷ் துருப்புகளுக்கு ஒத்தாசையாக. | ...... | ...... |
| 29—1—41 (புதன்கிழமை). | | | |
| | **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | கடற்படை நிலயம்.—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven). | ...... | பலத்த சேதம். |
| | மற்றும் சில இடங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany). | நஷ்டமில்லை. | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | பின்னடையும் இதாலிய துருப்புக்கள்.—எல்லா இடங்களிலும். | | |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 30—1—41. (வியாழக்கிழமை). | | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | விமானச்சண்டை.—டெபலேனி (Tepeleni) | நஷ்டமில்லை. | 3-விமானங்கள். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமான நிலயங்கள்.—பார்ஸி (Barce). | ...... | பலத்த சேதம். |
| | மற்றொரு விமான நிலயம்.—டெர்னு (Derna)வுக்கும் பென்காஸி (Benghazi)க்கும் மத்தியிலுள்ளது. | ...... | 1-விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது. கட்டடங்கள் நாசமாயின. |
| | பாலம்.—மேகா-நெகெல்லி (Mega-Neghelli) பாதை. | ...... | சேதமாயிற்று. |
| | விரோதி சைனியங்கள், கட்டடங்கள்.—மொயாலே (Moyale). | ...... | ...... |
| | வேவுபார்த்தல்.—லிபியா (Libya) | ... நஷ்டமில்லை. | 1 விமானம். |
| 31—1—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | துருப்புகள்.—டெபெலேனி (Tepeleni)-க்கருகிலுள்ள தூகாஜ் (Dukaj). | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | கப்பல்நிற்குமிடங்கள், கப்பல்கள், கடல் விமானங்கள்.—ட்ரிபோலி (Tripoli) துறைமுகம். | ...... | 1 கப்பல் திக்கிரையாகியது. 2 கப்பல்களுக்குச் சேதம், எங்கும் தீப்பிடித்தது. |
| | விமானநிலயம், கட்டடங்கள், கூடாரங்கள், சைனியங்கள் வசிக்குமிடங்கள்.—பார்ஸி (Barce). | நஷ்டமில்லை. | 2 விமானங்கள். கட்டடங்கள் சேதமாயின. |
| | தரையில் இருக்கும் விமானங்கள்.—டெராம்னி (Teramni). | ...... | 3 விமானங்கள் நாசமாயின. |
| | சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யுமிடம்.—அஸாப் (Assab). | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 1—2—41. (சனிக்கிழமை). | | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | சாமான் கிடங்குகள், வெடிமருந்துக் கிடங்கு, விறகு டேப்போ.-வலோனு (Valona). | …… | பல இடங்களில் தீப் பிடித்தது. கட்டடங் களுக்குச் சேதம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | சாமான் கிடங்குகள்.—அஸாப் (Assab). | …… | …… |
| | மோட்டார் வண்டிகள்.—மேகா (Mega), அயாவல்லோ (Iavello). | …… | சேதமாயிற்று. |
| | விமான நிலயங்கள்.—ஸுலா (Zula), லெகெனு (Leghena). | …… | கட்டடங்களில் தீப் பிடித்தது. |
| | தரையில் இருக்கும் விமானங்கள்.-பார்ஸி (Barce). | …… | 2 விமானங்கள். |
| | வேவுபார்த்தல்.—மத்திய கிழக்குப் பிரதேசம் (Middle East). | நஷ்டமில்லை. | …… |
| 2—2—41. (ஞாயிற்றுக்கிழமை.) | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—கப்பல் நிற்குமிடங்கள், சிறிய கப்பல்கள்-புலாயின் (Boulogne). | …… | பல கப்பல்களின் மேல் குண்டு வீழ்ந் தது. |
| | விமான நிலயங்கள்.—ஆஸ்டெண்டு (Ostend), ப்ரெஸ்ட் (Brest). | 1 விமானம். | 3 விமானங்கள். |
| | இரவில்.-கப்பல் நிற்குமிடங்கள்-ப்ரெஸ்ட் (Brest). | …… | பலத்த சேதம். |
| | **ஸார்டினியா (Sardinia).** | | |
| | மின்சார உற்பத்தி ஆலை.—ஸார்டினியா (Sardinia). | …… | …… |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ரோட்டுகள்.—டெர்னுவுக் (Derna)கும், பென்காஸி(Benghazi)க்கும் செல்லும் பாதை. | …… | …… |
| | மோட்டார் லாரிகள்.—ஸ்லோண்டா (Slonta). | …… | …… |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **2—2—41.** | (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.** | | |
| | மோட்டார் வண்டிகள்.-மாருவா (Marava), எல் குப்பி (El Gubbi). | ...... | பலத்த சேதம். |
| | விமான நிலயம், துருப்புகள், மோட்டார் வண்டிகள்.-அபலோனியா (Apollonia). | ...... | 4 விமானங்கள். |
| | விமானச் சண்டை.—ஸிரெனி (Cyrene). | ...... | 1 விமானம். |
| | மோட்டார் வண்டிகள், கட்டடங்கள்.—பாரெண்டோ (Barento). | ...... | கட்டடங்கள் சேதமாயின. |
| | மோட்டார் வண்டிகள்.—அஸ்மாரா (Asmara), அகோர்தாத் (Agordat). | ...... 1 விமானம். | சேதமாயின. 1 விமானம். |
| **3—2—41.** | (திங்கட்கிழமை). | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமான நிலயம், மோட்டார் வண்டிகள், கட்டடங்கள்.—காஸ்டல் பெனிடோ (Castel Benito). | ...... | பெருந்தீ கிளம்பியது; 7 விமானங்கள் தரையில் நாசமாயின |
| | மோட்டார் வண்டிகள்.—ஸான்ஸூர் (Zanzur). | ...... | ...... |

---

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **28—1—41.** | (செவ்வாய்க்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—தெற்குக் கடற்கரை ... | ...... | சிலருக்குக் காயம். |
| | தென்கிழக்கு இங்கிலாந்து (England) ... | | சொற்பச்சேதம். |
| | லண்டன் (London) (4 தரம் எச்சரிக்கை) | ...... | சொற்பச்சேதம். |
| | இரவில்.—இரண்டு பட்டணங்கள்—இங்கிலாந்தி(England)ன் மேற்கு, தென்மேற்குப் பாகங்கள், ஒரு பட்டணம்—தென்வேல்ஸ் (Wales). | | |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **28—1—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) | ... ...... | சேதமில்லை. |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | விமானச்சண்டை.—ஸ்கும்பி (Skumbi) நதி உற்பத்தி ஸ்தானத்தில். | 1 விமானம். | எல்பாஸானுக்கு விரட்டியடிக்கப் பட்டது. |
| | கிரேக்க போக்குவரத்து ஸாதனங்கள்.—பின்னணியில். | | |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | ரயில்வே ஸ்டேஷன், ஸலோனிகா (Salonika)விந்துப்போதும் ரயில்பாதை.—ப்ளாரினு (Florina). | | |
| **29—1—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம். | ...... | சொற்ப சேதம். |
| **30—1—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—லண்டன் (London) பிரதேசம், தென் கிழக்கு இங்கிலாந்து (England), கிழக்கு ஆங்கிலியா (Anglia)வில் சில பாகங்கள். | ...... | சில வீடுகள் சேதமாயின. சிலருக்குக் காயம். |
| | டோவர் (Dover), எஸ்ஸெக்ஸ் (Essex). | 1 விமானம். | ...... |
| | இரவில்.—எங்கும் விமான நடவடிக்கை இல்லை. | ...... | ...... |
| | **லிபியா (Libya).** | | |
| | பிரிடிஷ் சைனியங்கள்.—டெர்னு (Derna) ரோட்டு. | ...... | சேதமில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | ஸூயஸ் கால்வாய் (Suez Canal) பிரதேசம். | ...... | ஒருவருக்கும் காயமில்லை. |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **31—1—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—லண்டன் (London) பிரதேசம் | ...... | கட்டடங்கள் இடிந்தன. |
| | ஒரு பட்டணம்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ...... | தீப்பிடித்தது சிலருக்குக்காயம். |
| | இரவில்.—விமான நடமாட்டமில்லை. | ...... | ...... |
| **1—2—41** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia) வில் ஒரு பட்டணம். | ...... | சிலருக்குக்காயம். |
| | இரவில்.—இன்றிரவு விமானப் படையெடுப்பில்லை. | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | வேவு பார்த்தல்.—மால்டா (Malta). | 2 விமானங்கள். | குண்டுகள் விழவில்லை. |
| **2—2—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இன்று முழுவதும் விமானப்படையெடுப்பே இல்லை. | ...... | ...... |
| **3—2—41** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | பகலில்.—பல இடங்கள்—லண்டன் (London), கிழக்கு ஆங்கிலியா (Anglia), கெண்ட் (Kent). | ...... | சொற்பச்சேதம்; சிலர் மாண்டனர். |
| | மாலையில்.—ஒரு கிழக்கு மிட்லண்ட்ஸ் (Midlands) பட்டணம்; சில இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (Anglia), வேல்ஸ் (Wales). | ..... | சொற்பச் சேதந்தான். |
| | இரவில்.—லண்டன் (London), கிழக்கு இங்கிலாந்தி (England)ல் இரண்டு இடங்கள். | ...... | அதிக நஷ்டமில்லை, ஒருவருக்கும் காயமுமில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ...... | விரட்டியடிக்கப் பட்டன. |

# யுத்தக் குறிப்புகள்.

## மத்தியதரைக்கடலில் எதிர்ப்பு.

ஸிஸிலி ஜலசந்தியில் நமது துணைக்கப்பல்களை விமானங்களைக்கொண்டு எதிர்த்ததைப்பற்றி ஜெர்மன் பத்திரிகைகளும் இதாலிய பத்திரிகைகளும் வெகு ஆர்ப்பாடம் செய்கிறார்கள். அவர்கள் வீசுகிற வீச்செல்லாம் கேவலம் கைச்சரக்கென்று விரைவில் வெளியாகிற்று; ஆனால், வெடிகுண்டுபோடும் விமானம் உயர்வா அல்லது யுத்தக் கப்பல் உயர்வா என்ற வாதத்திற்கு புத்துயிர் ஏற்பட்டது. ஏன் அப்படி ஏற்படவேணும்? லார்ட் சாட்பீல்டு (Lord Chatfield) ஆழ்ந்த யோசனையின்பேரில் சொன்னபிரகாரம் "கடலில் கப்பல்களுக்கு ஆதிக்கம் குறையவில்லையென்பது இந்த யுத்தத்திலிருந்து வெளியாகிறது." நடப்பைக் கவனியுங்கள்.

(1) பிரான்ஸ் போரிலிருந்து அகன்று 6 மாதங்களுக்குப்பின், கடலில் வெகு குறுகிய பாகத்தில், திடீரென்று எதிர்க்கவேண்டிய வேலையை, மனதிற்கு வெறுப்பாயிருக்கும் ஜெர்மானியர் வசம் விடுவதென்றால், இதாலியருக்கு உற்சாகம் ஏற்படாது.

(2) எதிர்ப்பவர்களுக்கு ரொம்ப அனுகூலமான இடம் பார்த்து துணைக் கப்பல்களை நிறுத்தி காலையொடிக்கப் பிரயத்தனம் செய்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. கிரேக்கருக்கு விலையுயர்ந்த பண்டங்கள் கொண்டுபோன அக்கப் கல்களில் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட இடத்தைப்போய்ச் சேர்ந்தது. அக்கப்பல் களில், விமானம் கொண்டுபோகும் ஒரு கப்பலையும் ஒரு நாசகாரியையும் சேதப் படுத்தி, நமது பீரங்கிகளாலேயே அழிந்துபோகும்படி நேர்ந்த ஒரு யுத்தக் கப்பலுக்கு நெருப்புவைக்க, ஜெர்மானியருக்குக் குண்டுபோடும் விமானங்களில் 12-ம், ஒரு நாசகாரியும் செலவாயிற்று.

(3) திடீரென்று தாக்குதல் என்ற ஆயுதம் மழுங்கிக்கிடந்தது; நமது விமானப்படை ஒரு நிமிஷ தாமதம்கூடவில்லாமல் பதிலுக்கு பதில் பலமாய் உடனே கொடுத்தது. எதிரிகளின் விமானங்கள் பதுங்கிக்கிடக்கும் குகையான கடேனியா (Catania) விலுள்ள எதிரி விமானங்கள் அடித்து உடனே அழிக்கப் பட்டன; அவைகளின் சங்கியை எவ்வளவென்பதைப்பற்றி எதிரி விடுவிக்கும் செய்தி நாளுக்கு நாள் மாறுகிறது. கடைசியாக அவர்கள் ஒப்புக்கொண்ட தொகை 40 முதல் 50-க்குள் இருக்கிறது. எந்நிலைமையிலும் அச்சம்பவத்திலும் அதற்குப் பின்னுமாக நமக்குள்ளசேதம் எவ்வளவோ அதைப்போல் 8 பங்கு சேதம் எதிரிக்கு ஏற்பட்டிருக்கிறது.

(4) முழுகி குண்டுபோடும் விமானங்களாலும் 'டார்பீடோ' படகு களாலும் நமது கப்பல்களுக்குச் சேதம்; ஜெர்மன் விமானப்படையும் கப்பற் படையும் ஒத்து வேலைசெய்யவில்லை; சென்ற இரண்டு மாதகாலத்தில் நமது

விமானப்படை கப்பற்படை இரண்டும் ஒத்துழைத்து ஆச்சரியகரமான வேலை செய்ததுபோல் அங்கே கொஞ்சமும் இல்லை. ஆகையால், நமது கப்பல்களும், ஆகாயப் பாதுகாப்பும், விமானங்களால் பாதுகாப்பதும், எல்லாமுமாகச்சேர்ந்து நமது வியாபார கப்பல்களை ஜாக்கிரதையாய்ப் போகவேண்டிய இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பது திருப்திகரமாகயிருக்கிறது.

## ஜெர்மன் விமானப்படையில் பிளவு.

இந்தச் சண்டையில் 7 மணி நேரம் ஜெர்மானியர் கலந்திருந்தார்கள். இதில் இருந்து அவர்கள் கைவசமிருந்த எல்லா விமானங்களையும் (அவைகள் சங்கியையும் பெரியது) உபயோகித்தார்கள் என்பது நிச்சயம்.

அதாவது, இரண்டு போர்முனைகளில் ஜெர்மன் விமானப்படை சண்டையிடு கிறதென்று ஏற்படுகிறது.

இந்த எதிர்ப்பில் பல விமானங்களுக்கு ஏராளமான சேதம். விமான நிலையங்களிருக்குமிடங்கள் நமக்குத் தெரிந்துவிட்டபடியால் செப்பனிடுவதும் சிரமம்; மேலும், குண்டுகள், வெடிகுண்டுகள், உபரி சாமான்கள், அநேகமாய் எண்ணெய் பெட்ரோல் முதலியவையெல்லாம் ஜெர்மனியிலிருந்து இவ்வளவு தூரம் வரவேண்டியதாக இருக்கிறது.

மேலும் ஜலசந்தி வழியாகத் துணைக்கப்பல்களை நாம் அனுப்பாமலிருக்கும்படி செய்யும் எண்ணத்துடனேயே ஸிஸிலி (Sicily) பூராவும் ஜெர்மன் விமானி மயமாகவும், யந்திர நிபுணர்கள் மயமாகவும் இருக்கிறதென்று கதை கிளப்பி இருக்கிறார்கள் என்று நாம் ஊகிக்கலாம்; இது உண்மையானால் நாம் ஸிஸிலி (Sicily) பேரில் ஆகாயத்திலிருந்து குண்டுகள் போடும்படி நேரிடும்; இதன் பயன் என்னவாகுமென்றால், இந்த ஆபத்திற்குள்ளாக்கிய ஜெர்மானியர் பேரில் ஸிஸிலியாருக்கு பெருத்த அருவருப்பு உண்டாகும்.

## ஒரு பூகோள சாஸ்திர குறிப்பு.

இந்தச் சண்டையிலிருந்து இன்னும் அனுமானிக்கவேண்டிய விஷயங்கள் ஒன்று இரண்டு உண்டு. நமது துணைக்கப்பல்கள் பீரங்கிகளால் சுடப்பட்டுக் கொண்டிருக்கும்போதே 250 மைல் வரை செல்லுமுன், எதிரி தாக்குவதை நிறுத்தினது ஒன்று. விடாமல் முழுக்கு குண்டுகள் போடவேண்டுமானால் ஒரு பக்கத்தாருக்குக் குறுகிய ஜலசந்திகளில் இருப்பிடம்வேணும். திருப்பி அடிப்பதற்கு லாயக்காக சமீபத்தில் விமான நிலையமெதுவும் நிலத்தில் இல்லாமலிருக்கவேணும் (ஜெர்மன் 'ஸ்டோகா' தரையளவுக்கு இம்மாதிரி பறக்கும் சக்தியுள்ளது). இந்தக் கட்டுகளுக்குட்பட்டு, திடீரென்று விமான தாக்கல் செய்வதில் ஆபத்திற்கிடமுண்டு. ஆகையால் எங்கே இதற்கேற்ற இடங்கள் உண்டென்று கவனிப்போம். தூர கீழ் பிரதேசம் போக, அவை வெகு சொற்பம். அதாவது, இங்கிலீஷ் கால்வாய், கீல் கால்வாய், கரிபியன் சடலில் பல ஜலசந்திகள், பனாமா கால்வாய், மலாகா ஜலசந்தி, டாரிஸ் ஜலசந்தி, ஒட்ராண்டோ, மெஸ்ஸினா ஜலசந்திகள், பாஸ்பரஸ், ஓமான் வளைகுடா,

ஸூயஸ் கால்வாய், ஸிஸிலி, ஜிப்ரால்டர் ஜலசந்திகள், கருங்கடல், எட்ரியாடிக் முகத்துவாரங்கள், மத்தியதரைகடல் மத்திய பாகம் எல்லாம் மத்திய தரைக்கடலுக்குட்பட்டிருப்பதால், பெரிய சமுத்திரங்களில் ஜீவனான ஜலசந்திகளெல்லாம், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தார் வசமாவது, அமெரிக்கா வசமாவது இருக்கின்றன. பால்டிக் சமுத்திர முகத்துவாரமட்டும் இதற்கு விலக்கு.

## புசலுக்கு முந்தி.

சென்ற வருஷ வேனில் காலத்திற்குப் பின் அடுத்து வந்த வாரங்களுடன் இப்போதுள்ள வாரங்களை ஒத்துப்பாருங்கள். அதே மாதிரி எதிர்பார்ப்பு, யோசனை, ஜெர்மனி செய்ய எத்தனித்திருப்பதைக் துவக்கவேண்டுமென்ற ஆர்வம்—அத்துடன்கூட ஜெர்மனி என்ன செய்தாலும் செய்யட்டும், பலிக்காது என்ற நம்பிக்கை இப்போது இருக்கிறது.

போன வருஷம் இச்சமயம் கேட்டுக்கொண்டிருந்தோம், "எங்கே ஜெர்மானியர் தாக்குவார்கள், பெல்ஜியத்திலா, உலாந்தாவிலா, ஸ்விட்ஸர்லாந்திலா, மாஜினோ அரணிலா?" என்று. இவ்வருஷமோ:—

(*a*) பல்கேரியா மார்க்கம் ஹிட்லர் ஸலோனிகாவை எதிர்ப்பானா அல்லது கிரேக்கரிடமிருந்து இதாலியரைத்தப்பிவைக்க யூகோஸ்லாவியா, வட அல்பேனியா மார்க்கம் தாக்குவானா?

(*b*) 'சமாதானப் பிரவேசம்' இதாலிக்குள் செய்ய ஆரம்பித்துவிட்டானா? சமாதானமாயிருந்தாலும் அழுத்தமாய் இருக்குமா?

(*c*) ருஷ்யாவுடன் ஏதேனும் உடன்படிக்கை உண்டா—அல்லது அனுமதி அன்னியில் கருங்கடல் பக்கமிருந்து எண்ணெயும், தான்யமும் கொள்ளையடித்துப் போகும் உத்தேசமா?

(*d*) போர்ச்சுகலின் அட்லாண்டிக் துறைமுகங்களைப் பிடிக்கவேண்டி ஸ்பெயின் வழியே போக திட்டம் செய்து, அதே சமயத்திலோ, அல்லது பிரத்தியேகமாகவோ, அயர்லந்து மூலம் பிரிடன் பேரில் படையெடுக்கும் எண்ணமா?

(*e*) இது வரை ஆக்கிரமிக்காத இடத்தையும் ஆக்கிரமிப்பதாகவும், அவர்களில் 2,000,000 பேர்கள் தன் வசமிருப்பவர்களை ஹிம்சிப்பதாகவும் பிரான்ஸை பயமுறுத்தி, கப்பல்களையும், பைஸர்டா துறைமுகத்தையும், வட ஆபிரிக்காவிலுள்ள நாடுகளையும் கொடுக்கும்படி அரட்டுவானா?

ஹிட்லருக்குப் பல வழிகளிருக்கின்றன. அவனுக்கு வேறொரு யோசனையும் உண்டு—அதாவது, கொஞ்சம் பயந்த நடுநிலைமை தேசத்தார் முக்கியமாகவும், உலகத்தில் மற்ற எல்லோரும், ஹிட்லர் இவைகளில் எதைவேணுமானாலும் சாதிக்க வல்லமையுள்ளவன் என்று நினைக்கச் செய்யவேணுமென்பதும் அவன் நோக்கம். ஐரோப்பாகண்டம் முழுவதையுமே கலங்கவைத்து, பால்கன் நாடுகளை பயமுறுத்தி, ருஷ்யாவையும் கவனிக்கச்செய்து, பிரிடனையும் ஏமாற்றி வேறு யுக்தி செய்யும்படி செய்ய எண்ணங்கொண்டிருக்கிறான்.

படத்தின் மற்றொரு பக்கம் மேலேகண்ட (*a*) சம்பந்தமாக—

ஹிட்லர் பாயலாம், அல்லது பதுங்கலாம். ருமேனியாவில் 6,00,000 ஜெர்மன் சைனியம் இருக்கிறதாம்; உண்மையில் 1,30,000 தான் என்று சொல்லுகிறார்கள். ரஸ்ச்சக்கிற்கும் (Ruschhuk) நிகோபொலிஸுக் (Nicopolis)கும் மத்தியில் டான்யூப் (Danube) நதிபேரில் ஒரு பாலம் கட்ட அவன் உத்தேசிக்கிறதாகத் தெரிகிறது; ஹங்கேரியில் ரயில் மூலம் சாமான்கள் கொண்டுபோகும் சம்பந்தமான 'ஆபீஸ்'கள் திடீரென்று ஜாஸ்தியாகிவிட்டன. ஆனால், சிநேகோஷ்ண ஸ்திதி வெகு இடஞ்சலாக இருக்கிறது. பல்கேரியா சேரும் சகதியுமாயிருக்கிறது. பனி உரைந்து கிடந்தால் பாதகமில்லை. மேலும் கிரீஸிற்கும் இதாலிக்கும் ராஜி பண்ணுவதாக ஹிட்லர் சொன்னதை மெடாக்ஸாஸ் (Metaxas) உதறியெறிந்து விட்டார். இதாலியர் கொஞ்சம் நன்றாய் வேலை செய்தார்களேயானால் ஹிட்லர் இன்னமும் ஏதேனும் செய்யலாம்; ஆனால் எல்லாம் (1) சீதோஷ்ண நிலையையும் (2) (ஊக்கத்துடன் போர்புரிந்துவரும்) கிரேக்கர்களையும் பொருத்தது.

(*b*) சம்பந்தமாக—

சென்ற வாரம் நாங்கள் போட்ட குறிப்புகளைக் கவனியுங்கள். இதாலியர்களும் ஸிஸிலியர்களும் ஜெர்மானியரை வெறுக்க பள்ளிக்கூடத்திலேயே கற்றுக் கொண்டார்கள். அச்சு இருக்கட்டும் இல்லாமலிருக்கட்டும், மறு முறையும் ஜெர்மன் படையெடுப்பு நேர்ந்தால் கசப்பு ஜாஸ்திதான் ஆகும்.

(*c*) சம்பந்தமாக—

ரஷியர்களுக்கு இரண்டு சுபாவ விரோதிகள்—ஜெர்மானியர், ஜப்பானியர். ஜப்பானுடன் ஒத்துப்போங்களென்று ஹிட்லர் சொல்லுவதை இதுவரை ரஷியர் கேட்கவில்லை; ஆனால், இருபுறத்திலும் சண்டைசெய்ய லாயக்கான ராணுவம் அவர்களிடம் இல்லை. ஆனால் ஜெர்மனியின் ராணுவபலம் ருஷ்யாவிற்குத் தெரியும்; சமீப கீழ்நாடுகள் சம்பந்தமாக ஜெர்மனிக்குள்ள நோக்கங்களும் தெரியும்; ஆகையால், ஜெர்மனியுடன் போருக்குப் போகாமல் வியாபார உடன்படிக்கைகள் செய்ததுபோல் பெயர் பண்ணி, இங்கிலாந்தையும் தூரத்திலேயே வைத்து இருக்கிறார்கள். இருந்தபோதிலும் வெகுவேகமாக ஆயுதபாணிகளாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். யாருக்கு விரோதமாக? அவர்களுக்கு இடஞ்சல் செய்ய முடியாத தூரத்திலிருக்கும் ஜனநாயக தேசங்களுக்கு விரோதமாகவா, அல்லது .....................?

(*d*) சம்பந்தமாக—

கைத்தொழில் பலமுள்ள அமெரிக்கா பிரிடனுக்கு எல்லாருமறிந்த துணை. அமெரிக்காவிலிருந்து வரும் தளவாடங்கள் வெள்ளபெருக்காகுமுன் ஹிட்லர் இங்கிலாந்தைத் தாக்கி அடிக்க முயலவேணும். கவர்ன்மெண்டு இலாகாக்கள், வியாபார சங்கங்கள், பொதுமனிதர்கள் சொல்லுவதைப் பார்த்தால், ஹிட்லர் அப்படி ஒரு கைபார்க்க வேண்டுமென்பதுதான் அவர்கள் ஆவல். ஏனென்றால்,

யுத்தம் சீக்கிரத்தில் முடிவிற்கு வந்துவிடும். ஒருதரம் ஹிட்லர் எடுத்த படை எடுப்பு பலிக்காததே இன்னுமொரு படையெடுப்பு அவன் பண்ணினால் நமக்குத் தைரியம் கொடுக்கும். இச்சமயம் ஜாஸ்தி யுக்தியுடனும் சூரத்துடனும் செய்ய லாம். ஆனால், சென்ற ஸெப்டம்பர் மாதத்திற்குப்பின் நமது பலம் அதிகரித்து விட்டது, ஜயிப்போம் என்ற நம்பிக்கையும் ஏராளமாக வலுத்துவிட்டது. ஸ்பெயின் சம்பந்தபட்ட வரை ஜெர்மன் மண் குதிரையை நம்பி அது ஆற்றில் இறங்காது என்றும் வட ஆபிரிக்காவில் அதன் அக்கரைகளை தானே கவனித்துக் கொள்ளுமென்றும் தெரிகிறது.

### (e) சம்பந்தமாக—

இனி தினசரி ரேடியோ கேளுங்கள். பீடேனுக்கு இப்போது சிரமதசை; ஆயினும் பேச்சுப்படி ஜெர்மனி நடக்கவேண்டுமென்று அவர் வற்புறுத்துகிறார்; அவரை பிரான்ஸில் பெரும்பாகம் ஆதரிக்கிறது. அமெரிக்காவிலிருந்து மனதில் படும்படியான விதமாக அட்மிரல் லீஹி (Admiral Leahy) அவருக்குச் சமாசாரம் சொல்லியிருக்கிறார். மேலும், அவர் இழுத்து விடுவது நலம் என்று நினைத்து சாமர்த்தியத்துடன் இழுத்துக்கொடுத்தும் வருகிறார்.

### நாம்

இந்த அமர்க்களத்திலிருந்து நமது ஸமஸ்தானம் வெகுதூரத்திலிருக்கிறது என்று நினைக்கலாம். ஆனால் பிரிடன், பிரான்ஸ், ஜெர்மனி, பால்கன் நாடுகள், ஜப்பான், அமெரிக்கா முதலியவைகளுக்கு இது எவ்வளவு நெருக்கடியான நிலைமையோ அதைப்போலவே புதுக்கோட்டையிலுள்ள நமக்கும் இது ஒரு நெருக்கடியான சமயம் என்பதை நாம் அறியவேணும். சென்ற ஜூன் மாதத்தில் நமக்கும் இந்தியாவிற்கும் அடுத்துவரும் போலிருந்த ஆபத்தை வட ஆபிரிக்காவில் தளகர்த்தர் வேவல் (General Wavell) வெகு சாமர்த்தியத்துடன் விலக்கி விட்டார். இதாலியானது இரண்டு பக்கங்களில் தாக்கப்பட்டு திண்டாடுகிறது. ஆனால் இது சாவதானம் என்ற நிலைமையையடைய நாம் போகவேண்டிய கரடு முரடான ரஸ்தா. ஜெர்மன் ராணுவமோ மகத்தானது; சண்டையில் இதாலியரைக்காட்டிலும் ஜெர்மானியர் சூரர்கள்; உலகத்திலேயே பெரிய சங்கியையுள்ள 70,00,000 பெயர்கள் கொண்ட சைனியம் ஜெர்மானியர் வைத்திருக்கிறார்கள். பால்கன்களுக்குள் பிரவேசித்தால் துருக்கிக்கு ஆபத்து. துருக்கி இந்தியாவிற்கே எல்லைப்புறம்.

அதனால்தான், நாம் எக்காரணத்தைக்கொண்டும் கவனக்குறைவாகவும், எல்லாம் சரிவர இருக்கிறதென்று எண்ணியும் பிரிடனிலும் இந்தியாவிலும் புதுக்கோட்டையிலும் யுத்த சம்பந்தமான பிரயத்தனங்களில் தளர்ச்சியடையக் கூடாது. இன்னும் வெகுகாலம்வரை, சரியானவிதமாக, ஒழுங்காக முயற்சி செய்யவேண்டியது நமது முக்கிய கடமையாகும். புதுக்கோட்டையில் ஆண், பெண், சிறு பிள்ளைகள் அடங்கலும் இப்படிச் செய்யவேண்டியது கேவலம் கண்ணியப்பொறுப்பு மாத்திரமல்ல, நிர்ப்பந்தமான அவசியம்.

# யுத்தத்தின் போக்கைப்பற்றி ஜெனரல் டிகால் கூறுவது.
# லிபியாவில் ஆங்கிலேயர் முன்னேற்றத்தின் விளக்கம்.
# ஸிரியா தேசத்தார்களின் மனப்பான்மை.
# ஜெனரல் டிகால் இந்தியர்களுக்கனுப்பிய செய்தி.

(மேற்கண்ட தலையங்கமிட்டு T. A. ராமன் அவர்கள் ஜெனரல் டிகால் அவர்களைக் கண்டுபேசி எழுதுகிறார்.)

பிறர் மனதை வசிகரணம் செய்யக் கூடிய தேக பலமும், மனோ பலமும் வாய்ந்தவர் ஜெனரல் டிகால். அவர்கள் இனிமையான முகமலர்ச்சியுள்ளவர்; அத்துடன் மிகவும் கௌரவமும் காம்பீர்யமான பார்வையுமுடையவர்.

தன்னுடைய அலுவல்களில் த்ருடமான பக்தியும், அசலமான வைராக்யமும் உள்ளவர். குறிப்பாக, இனிய நடையில் எளிதாய்ப் பேசும் திறமை உண்டு. ஸாதாரணமாக ஓய்வு காலங்களில்கூட ஆழ்ந்த ஆலோசனையின் பேரில் மிதமாகப் பேசுவார். கேட்ட கேள்விகளுக்குத்தான் பதில்; அதுவும் இரண்டொரு வார்த்தைகள்தான். 'கருமமே கண்ணாயினார்' என்று அவரைக் குறித்து ஸந்தேகமில்லாமல் சொல்லலாம். மனக் கோட்டை கட்டுபவரல்ல. காரியத்தைச் செய்தே காண்பிவிப்பார்; செய்து போடுவேன் என்று வெரும் பேச்சுப் பேசுகிறவர் அவரல்ல.

நான் அவரை பேட்டி கோரி பார்வையிட்டேன். என்னை நல்வரவு கூறினார். விஷியில் சற்று காலமாக நடந்துவரும் சம்பவங்களைப் பற்றி அவருடைய அபிப்பிராயம் என்ன என்று கேட்டேன். தன்னுடைய முடிவான எண்ணத்தைத் தெரிவித்தார்.

"விஷியில் உள்ள சில ஜனங்களுக்குப் புதிதான மனோ நிலைமை உண்டாகி இருப்பதாகத் தெரிகிறது.

"எனக்குக் கிடைக்கும் தகவல்களிலிருந்து, பிரான்ஸ் தேசம் மறுபடியும் கிளம்புகிறதென்றும், மேற்படி கிளர்ச்சியிலிருந்து அவர்கள் பின்வாங்க மாட்டார்கள் என்றும், அந்த அம்சத்தில் அவர்களைப் பூருவாக நம்பலாம் என்றும், எனக்குத் தோன்றுகிறது."

"அதாவது, முறிபட்டதினால் உண்டான அதிர்ச்சியில் இருந்தா?" என்று நான் வினவினேன்.

"இல்லை. பிரான்ஸ் தோற்கடிக்கப் படவில்லை. பிரெஞ்சு நிர்வாஹம் தான் தோல்வி அடைந்தது. பிரெஞ்சு ராணுவப் படை தோல்வியினால் ஏற்பட்ட அடியிலிருந்து ஜனங்கள் இப்பொழுதுதான் எழுந்திருக்கிறார்கள். புதிதான தேச ஒற்றுமை ஏற்படுகிறது. ஆனால் இப் புதிய சக்தியைக் கைக்கொண்டு, ஜனங்களை ஜெர்மனியின் ஸர்வாதிகாரித்வத்திலிருந்து விடுவிக்க விஷியில் உள்ள சூழ்ச்சிக்காரர்களால் இயலாது."

அப்பால் கீழ் மத்திய நாடுகளின் நிலைமையைப் பற்றி பேச ஆரம்பித்தோம். முக்கியமாக ஸிரியாவின்

ஸ்திதியைப் பற்றி ஸம்பாஷணை நடந்தது.

ஜெனரல் சொன்னதாவது: "ஸிரியாவில், பல தேசத்தார்கள், பல மதஸ்தர்கள் இருக்கிறார்கள். மிகவும் சிக்குள்ள நிலைமையுடையது. இருந்த போதிலும் இதுகால், தன்னுடைய ஸ்வேச்சையைப் பாதுகார்த்து வந்திருக்கிறது. தாடஸ்யமான வாழ்க்கையும் நோக்கமும் இருந்து வந்திருக்கிறது.

"ஒருக்கால் நம்முடைய சத்துருக்கள் ஜயித்தால், ஸிரியாவிற்கு விநாசகாலம்தான் ஏற்பட்டுவிடும்; ஏனெனில், நாஸி மதமானது, ஸிரியா தேசத்தார்களுக்கு முற்றிலும் மாறுபாடானது.

"ஜெர்மானியர்கள் ஜயிப்பதைத் தடுப்பதுதான் ஸிரியர்களுடைய முதன்மையான கவலையும் காரியமுமாகும்; எந்த க்ஷணம் ஜெர்மானியர்கள் ஸிரியா தேசத்தில் காலடி வைக்கிறார்களோ, அந்த க்ஷணமே ஸிரியா தேசத்தார்கள் அனைவரும் அவர்கள் சைனியங்களுடன் நம்முடைய பக்கம் சேர்ந்து விடுவார்கள் என்பதில் எனக்குப் பூர்ண நம்பிக்கை உண்டு."

லிபியாவில் ஆங்கிலேயர்கள் வெற்றி அடைவதைப்பற்றி மூன்று விஷயங்கள் கூறினார்.

1. "இந்தியத் துருப்புகள், இதர பிரிடிஷ் ஸாம்ராஜ்யப் படைகளுடனும், பிரெஞ்சுப் படைகளுடனும், மிகவும் ஸாமர்த்தியத்துடன் போர் புரிந்து வெற்றி அடைவதில் நான் திருப்தியுடன் என்னுடைய சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.—ஏதோ, தாங்கள் ஒரு இந்தியர், உங்களைத் திருப்தி செய்ய இவ்வாறு பேசுகிறேன் என்று நினைக்கவேண்டாம்."

2. "ஸமுத்திரத்திலும், ஆகாயத்திலும் பிரிடிஷ் ஸாம்ராஜ்யப் படைகள் மிகவும் திறமை வாய்ந்தவை என்று ஏற்பட்டிருப்பதுபோல், தரைச் சண்டையிலும் நிபுணர்கள் என்று லிபியா ஜயங்களிலிருந்து வெளியாகிவிட்டது."

3. "பெருத்த ஆயுதபலம் பூண்ட சைனியம் போரில் ஜயிக்க எவ்வளவு சுலபமான ஹேது என்பது நன்கு விளங்கிவிட்டது. இப்பேற்கொத்த சைனியத்தினால் தரைச் சண்டை போடுவது எவ்வளவு லாபகரம் என்பதும் வெளியாயிற்று."

"மேற்கண்ட விஷயங்களே, எதிர்காலத்தில் சண்டையின் போக்கு எப்படி இருக்கும் என்பதையும் விளக்கிக் காண்பிக்கும்" என்றும் கூறினார்.

"இந்நவீன யுத்தத்தில், மிகவும் சக்தி வாய்ந்த ஆயுத உபகரணங்கள் அவசியம் ஏராளமாக சேர்த்து வைக்க வேண்டும் என்றும், அவ்விதம் பலமுள்ளவர்கள்தான் கடைசியில் ஜயிப்பார்கள் என்றும் நான் எக்காலத்திலும் கூறிவந்திருக்கிறேன். நாம் இறுதியில் நிச்சயமாய் ஜயிக்கிறோம்; ஏனென்றால், பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்தில் பல திக்குகளிலிருந்து ஏராளமான பொருளுதவி, திரவ்ய உதவி, சைனிய உதவி இடைவிடாது நமக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கின்றது. இதுவும் போராமல், அமெரிக்காவின் உதவி மேன்மேலும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. கூடிய சீக்கிரத்தில், ஆயுத ஸாமக்கிரியைகள் ஜெர்மானியர்களைக் காட்டிலும் நம்மிடம் குவிந்துவிடும்.

இத்தகையான ஆயுத ஸம்பத்தே ஜயத்திற்கு மூலகாரணமாகும்.''

"இந்தியர்களுக்கு ஒரு செய்தி விடுவிக்கும்படி என்னைக் கேட்டுக் கொள்ளுகிறீர். முழுமனதுடன் சொல்கிறேன் கேளுங்கள். இச் சண்டையை, உலகில் ஒரு தேசமும் அலக்ஷ்யம் செய்யக்கூடாது. ஒவ்வொரு தேசத்தின் எதிர்கால நிலைமையும், இச் சண்டையில் அவரவர் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கையைப் பொருத்ததாகும். இந்தியர்களோ, இந்த யுத்தத்தில் பெருங் காரியங்களைச் சாதிக்க சக்தி உள்ளவர்களாய் இருக்கிறார்கள். இதற்குமேல் நான் சொல்லப் போவதில்லை'' என்று சொல்லிக் கொண்டே திடீரென்று ஸம்பாஷணையை முடித்துவிட்டார்; புன் சிரிப்புடன் கைகுலுக்கினார்; "தங்களுக்கும், தங்களுடைய தேசத்திற்கும் க்ஷேமகாலம் உண்டாக வேண்டும்'' என்று ஆசிமொழிகள் கூறினார். நானும், "பிரெஞ்சு தேசம் ஜயம் அடைய, நீடூழி வாழ்க'' என்று பதில் அளித்தேன். "வந்தனம் தங்களுக்கு'' என்று சொல்லி உடனே தன் அலுவலைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார்.

---

## மார்ஸெயில்ஸ் யுத்தம் செய்கிறது.
## பிரெஞ்சு மாலுமிகள் பிரிடிஷ் கடற்படையில் அமருகிறார்கள்.
## ஜெர்மானியர்களைப்பற்றி நகரவாஸிகளின் கொள்கை.

(இந்தியாவிற்கு சிகாகோவிலிருந்து வரும் டெயிலி நியூஸ் பத்திரிகையில் கடைசியாகவந்த செய்தி பின்வருமாறு).

**நா**ஸிகள் 5 மாதமாக தென் பிரான்ஸை கைவசப்படுத்தி அமுல் நடத்தியபோதிலும், பிரான்ஸின் தென்கரையிலுள்ள பெரிய துறைமுகமாகிய மார்ஸெயில்ஸ், பிரிடிஷ் கடற்படைக்கு இன்னும் மாலுமிகளை அளித்துக்கொண்டிருக்கிறது. முன்காலத்தில் புகழ்பெற்ற பிரெஞ்சு கப்பற்படையின் மாலுமிகள் ஜெர்மனியுடன் யுத்தம் செய்வதை நிறுத்த மறுத்துவிட்டார்கள். சமுத்திரக்கரை முனையில் இது சாதாரணமான இயல்புதான். அநேகமாய் நடப்பு பின்வருமாறு

ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டபடி ஒரு அறிவிப்பின் பேரில் ஒரு பிரிடிஷ் யுத்தக் கப்பல் நடுராத்திரியில் சமுத்திரக்கரை ஓரமாய் சப்தமில்லாமல் செல்லுகிறது. கரை ஓரமாயுள்ள பன்னிரண்டு மறைவு ஸ்தலங்களிலிருந்து பிரெஞ்சுக்காரர்கள் சிறிய படகுகளில் ஏறி மெதுவாய்ப் புறப்படுகிறார்கள். ஜெர்மன் ரகஸியப்போலீஸின் கவனிப்பை விட்டுக்கடந்த பிறகு அவர்கள் பிரிடிஷ் கப்பல் தோணிகளில் ஏறிக்கொள்ளுவார்கள்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மேற்கு மத்தியதரைக்கடலில் இருக்கும் பிரிடிஷ் கப்பற்படையில் அவர்களுக்கு நியமனம் செய்யப்பட்ட ஸ்தானங்களில் அவர்கள் அமர்ந்து பிரிடிஷ் மாலுமிகளின் பழக்கங்களையும் பிரிடிஷ் கப்பற்படையின் பீரங்கிகளின் அமைப்பையும் அறிந்துகொள்ள பிரயத்தனப்படுகிறார்கள்.

இவ்விதம் மார்ஸெயில்ஸிலுள்ள மாலுமிகள் ஜெர்மானியர்களிடமும் விஷி துரைத்தனத்திடமும் அவர்களுக்கு உண்டாயிருக்கும் அருவருப்பை வெளியிடுகிறார்கள். மற்ற ஜனங்களுடைய மனப்பான்மையும் பெரும்பாலும் இதே மாதிரி தான். மாலுமிகள்போலவே அவர்களும் தங்கள் எண்ணங்களை நேர்முகமாக வெளிப்படுத்துகிறார்கள்.

அரண்மனைபோலிருக்கும் நோயில்ஸ் ஹோட்டலிலிருக்கும் ஜெர்மன் தூதர்களில் அநேகர் சரண்புகுந்தவர்களின் அநேகரை பகலிலேயே பின்பற்றிச் செல்லுகிறார்கள். ஜெர்மானியர்கள் பொதுஜனங்களைப்போல் உடுப்புகள் தரித்துக்கொண்டு ஒருவரும் அறிந்துகொள்ளாதபடி செல்லுவதுதான் சாவதானமென்று நினைக்கிறார்கள். மார்ஸெயில்ஸில் நாஸிகளை பிரெஞ்சுக்காரர்கள் வரவேற்கும் விதம் பின்வருமாறு. முதலெடுப்பில் ஜெர்மானியனை ஒரு விசித்திரமான பிராணியைப் பார்ப்பதுபோல் விரித்த கண்களுடன் உற்றுநோக்குதல், பிறகு சிறிய புன்சிறிப்புடன் அவன் மறைந்து செல்லும்வரை அவனைப்பார்த்தல்.

## கொழுப்பு உணவைக் காப்பாற்றுதல்.

ஒருசமயம் பிரெஞ்சுக்காரர்களுக்கு வேண்டிய ஸோப்புகளுக்குத் தேவையான ஆறுமாதத்திற்கு உபயோகப்படுத்தக்கூடிய கொழுப்புகளை ஜெர்மானியர்களின் உபயோகத்துக்கு அனுப்பும்படி செய்வார்களென்று ஸோப் உற்பத்தி செய்கிறவர்கள் அறிந்துகொண்டார்கள். எதிர்பாராதவண்ணம் அன்றிரவு லாரோக்-போரான் என்னும் இடத்திலிருந்த மேன்பாலம் தூளாக்கப்பட்டு, மார்ஸெயில்ஸிலிருந்து ஸ்விட்ஸர்லாந்து வழியாக ஜெர்மனிக்குப்போகும் இருப்புப் பாதை அடைக்கப்பட்டுவிட்டது. கொழுப்புச் சேமிப்பு மார்ஸெயில்ஸில் குறைவடையவில்லை.

ஒரு மார்ஸெயில்ஸ் நகரவாஸியிடம் ஒருவன் சென்று அவன் விஷி துரைத்தனத்தின் ஏஜெண்டு இல்லையென்றும் ஜெர்மனியின் ரகசியப்போலீஸைச் சேர்ந்தவனுமில்லையென்றும் அறிவித்தால் அவனிடம் அவனுடைய நவீன அரசர்களிடம் அவனுக்குள்ள அருவருப்பை அந்த மார்ஸெயில்ஸ்வாசி விரைவில் எடுத்துரைப்பான்.

## பிடேன் ராஜ்ய பாரத்தில் அவநம்பிக்கை.

பிடேன் துரைத்தனத்திலிருப்பவர்களில் ஒருவர்கூட தெற்கு பிரான்ஸிலிருந்து தேர்ந்தெடுக்கப்படாததால் மார்ஸெயில்ஸ் ஜனங்கள் சாதாரணமாக அவர்களை நம்பவில்லை. 70 வருஷமாக அவர்கள் தெற்குநாட்டில் ஜனித்த ப்ளம் போன்ற அமித ராஜீய கக்ஷியாரோடு ஒத்துழைத்து வந்திருக்கிறார்கள். ஆகையால் சார்லஸ் மாரஸ் போன்ற மன்னர் ஆளுகைகக்ஷியில் சேர்ந்தவர்களுக்கு பிடேன் சலுகை காட்டுகிறானென்றும் அது பிரஜாதிபத்ய ஆக்ஷிக்கு எதிரிடையானது என்றும் சந்தேகிக்கிறார்கள். வயது முதிர்ந்த பிடேன் பாரிஸின் மூலகர்த்தா போன்ற ஒரு ராஜாவை ஸிம்ஹாஸனம் ஏற்றுக்கொள்ளும்படிசெய்ய அபிப்பிராயப் படுவானென்றும் அவர்கள் முழுமனதுடன் நம்புகிறார்கள்.

லவால் கக்ஷியில் சேர்ந்தவர்களிடம் மார்ஸெயில்ஸிலிருப்பவர்களுக்கு உண்டாயிருக்கும் துவேஷமானது பாரிஸின்மேல் நாஸிகள் படையெடுத்த காலத்தில் பின்வாங்கி ஓடிய சிப்பாய்களோடு பந்தயம் போட்டு ஓடிய ஒரு ஆபீஸரிடத்தில் ஜனங்களுக்கு எவ்வளவு அருவருப்பு ஏற்பட்டதோ அதோடு ஒப்பிடக்கூடியதாயிருக்கிறது.

யுத்தம் நடந்த மாதங்களில் மார்ஸெயில்ஸில் கொஞ்சம்கூட ஜனச்சேதமில்லை. துறைமுகத்தில் இரண்டு தடவை குண்டுகள் வீசப்பட்டது வினு நகரத்தில் ஏற்பட்ட கஷ்டங்கள் முக்கியமாய் பொருளாதார நிலைமையினுல் உண்டானவை.

700,000 ஜனங்களில் 20,000 தொழிலாளர்களுக்கு ஒரு வேலையுமில்லை. கப்பல் கட்டும்வேலை வாரம் 100,000 டன்களிலிருந்து 10,000 டன்களுக்குக் குறைந்துவிட்டது. இதுவும் ட்யூனிஸ்ஸுக்கும் ஆல்ஜியர்ஸுக்கும் அனுப்பப்படும் சிறிய தோணிகள் தவிர வேறல்ல.

ஒரு இதாலிய சுங்கம் வாங்கும் அதிகாரிகள் கோஷ்டி மிகவும் கடுமையான அமுலுடன் துறைமுகத்தில் பரிசோதனை செய்கிறுர்கள். போக்குவரத்து, சட்ட வரம்பைச் சரியானபடி அனுஷ்டித்ததாகயிருக்கவேண்டும். கப்பல்களில் சாமான் ஏற்றியிருந்தாலும் இல்லாவிட்டாலும் குறிப்பிட்டநேரங்களில் அவைகள் புறப்பட வேண்டும்.

இம்மாதிரியான கஷ்டங்களிருந்தபோதிலும் மார்ஸெயில்ஸ் ஜனங்கள் அவர்கள் சம்பந்தப்பட்டமட்டில் யுத்தம் முடிந்துவிட்டதென்றும் ஜெர்மனியோடு ஒத்து உழைக்க அவர்கள் இணங்கவேண்டுமென்றும் நினைக்கவில்லை. பிரான்ஸ் தேசத்தில் மற்ற எல்லா இடங்களையும்விட மார்ஸெயில்ஸ் தேசத்தில் தான் நாஸிகளின் அமுல் மிகவும் அபாயகரமான நிலையிலிருக்கிறதென்று சொல்லலாம். இந்த மார்ஸெயில்ஸில்தான் 148 வருஷங்களுக்குமுன் பிரெஞ்சு பிராஜாதிபத்யத்தின் வாழ்த்துப்பாட்டு ஏற்படுத்தப்பட்டது.

(இதை பிரசுரித்தவர் ஒரு குறிப்பு எழுதியிருக்கிறுர். அதாவது, டெயிலி நியூஸ் பேபருக்குக் கிடைத்த இந்தச்செய்தி பிரான்ஸில் வெகுநாள் வசித்துப் பிறகு அமெரிக்காவுக்குத் திரும்பிவந்த ஒருவர் மூலமாய்க் கிடைத்திருக்கிறது. பிரெஞ்சு ஜனங்களின் அபிப்பிராயங்களை மதித்துப்பார்க்க, மிகவும் திறமை வாய்ந்த இவருடைய அபிப்பிராயத்தைக்கொண்டு, ஐக்கிய நாடுகளுக்குக் கிடைக்கும் பரிசோதனைக்குள்ளாகாத விருத்தாந்தங்களில் இதை ஒன்ருகக்கருதலாம்.)

---

# சேனைத் தலைவர் ஸ்டீபன் கிங் ஹால் அடியில் கண்ட இரண்டு முக்கியமான பிரச்னைகளைப்பற்றி எழுதியிருக்கிறார்.

(1) பிரிடனுக்கு உதவி செய்யும் விஷயமாய் அமெரிக்காவின் அபிப்பிராயம்.

(2) ஜெர்மன்—ருஷ்யா தேசங்களுக்குள் ஏற்பட்ட உடன் படிக்கையின் அர்த்தம்.

(I)

யுத்தத்திற்கு அவசியமான தளவாடங்களை உண்டுபண்ணுவதற்காகவும், பாது காப்புக்கு வேண்டிய வேலைகளுக்குத் தேவையான பணத்தைச் சேகரிக்கவும், ஏற்பாடு செய்யவேண்டிய பிரச்னைகளை அட்லாண்டிக் மகாசமுத்திரத்திற்கு அப்பால் இருக்கும் நாடுகள் தீவிரமாய் சர்ச்சை செய்துகொண்டிருக்கிறார்கள்.

சென்ற மூன்று வாரங்களாக பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் நிகழ்த்திவரும் அநேக பிரசங்கங்களும் அமெரிக்கன் காங்கிரஸினுடைய ஆதரவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் ஆலோசனைகளும், நாஸிகளின் ராஜ்ய தந்திரமும், யுக்திகளும் பிரயோஜனமில்லாமல் போய்விட்டனவென்று பகிரங்கமாய் வெளிக் காட்டுகின்றன. முக்கியமாக மேலே சொன்ன நிகழ்ச்சிகளிலிருந்து, ஜெர்மனி, இதாலி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளின் ஒப்பந்தத்தினால் அமெரிக்காவின் ஜனங்களை ஐரோப்பாவின் வியவகாரங்களில் தலையிட்டுக்கொள்ளாமல் ஒதுங்கி நிற்கும்படி பயமுறுத்தவேண்டுமென்று அச்சு நாடுகள் எண்ணியது பொய் என்றும் வெளியாகிறது. ஐக்கிய நாடுகள் சம்பந்தமாக நாஸிகள் மூன்று விதமான எண்ணம் கொண்டிருந்தார்கள். (1) தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சத்துருக்களில் மிகவும் பலிஷ்டனும், மிகவும் அபாயகரமாயுமிருப்பவன் ரூஸ்வெல்ட்டு என்று நாஸிகள் நன்கு மதித்து அவன் மறுபடியும் தலைமை வகிக்காமலிருக்கும்படி செய்யவேண்டுமென்பது; (2) சண்டையில் கலக்க வேண்டாமென்கிறவர்களையும், பிரிடிஷாருக்கு எதிர்ப்படையாய் நோக்கமுள்ள வர்களையும் உற்சாகப்படுத்தி அதன் மூலம் பிரிடனுக்கு அமெரிக்கா அளிக்கும் உதவியை சொல்பமாய்ச் செய்துவிடவும்; (3) ஜப்பானைத் தூர கீழ் தேசத்தில் எதிர்ப்பு நடவடிக்கையை அதிகப்படுத்தும்படி தூண்டிவிட்டு அந்தப் பிரதேசத் தில் உண்டாயிருக்கும் சங்கடத்தைப்பற்றி அமெரிக்காவை கவலைப்படும்படிக்கும் இப்படிச் செய்வதன் மூலம் பிரிடனுக்கு அமெரிக்கா அளிக்கும் உதவியைப் பின்னும் குறைத்துவிடவும்.

இந்த நோக்கங்கள் சித்தி பெறாதது மட்டுமல்ல, நாஸிகளின் இந்த தந்திரத்தினால் அமெரிக்கா தேசத்து ஜனங்கள் சந்தேகமன்னியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது, மேற்கு ஐரோப்பாவிலும், அல்பேனியாவிலும், வட

ஆப்பிரிக்காவிலும் நடக்கும் யுத்தத்தைப்போல் தூரக்கிழக்கிலும் எதிர்ப்பு பரவப் போகிறதென்றும் இந்த யுத்தம் ஐரோப்பா முதலிய இடங்களில் நடக்கும் யுத்தத்தின் ஒரு அம்சமென்பதும் தான்.

அமெரிக்காவின் ஏராளமான ஐச்வர்யங்களை, ஜனநாயக ஆக்ஷியைக் கைக் கொண்டிருக்கும் நாடுகளின் உதவிக்காகக் கொடுத்துவிடுகிறதென்றும் அதனால் அவர்கள் யுத்தம் செய்ய நேரிட்டாலும் பொருட்படுத்துகிறதில்லையென்றும் ஐக்கிய நாடுகளின் துறைத்தனத்தார் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள். பிரிட்டனுக்கு உதவி செய்யும் ஒவ்வொரு ஆலோசனையிலும் சென்ற சில மாதங்கள் வரையில் "யுத்தத்துக்குப் போகாமல் செய்யும் ஒத்தாசைகள்" என்று ஒரு ஷரா எழுதிக்கொண்டிருந்ததை இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக அமெரிக்கர்கள் எடுத்துவிட்டார்கள்.

இந்த யுத்தத்தில் இது முதல் 1941-ம் வருஷம் முடிவதற்குள் ஒரு சோதனையான நிலைமை உண்டாகப் போகிறது. இந்த வருஷம் முழுவதும் நாஸிகளின் எதிர்ப்பை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கக்கூடும். அமெரிக் காவின் உதவியால் நாம் கடைசியில் வெற்றி பெறப்போகிறோம். நமக்கு காலம் கடப்பதனால் சௌகர்யமேற்படும். நாம் சகித்துக்கொண்டிருக்கக்கூடும். பிரிடிஷ் ராணுவத்தில் சரியான மேலதிகாரியும் ஒத்துழைப்புமில்லாததனால் நம்முடைய உயர்வான நோக்கங்களை அடைய முடியவில்லை. அது வரையில், நாம் முன்னேறினால் அதன் பயனை அனுவசியமாகக் கோரமான அபாயங்களை அனுபவிக்கும்படி நேரிடும். ஹிட்லரும் இந்த விஷயங்களை நன்றாய் அறிந் திருக்கிறானென்று நாம் வைத்துக்கொள்ளலாம். ஜெர்மனி புதிதான ஒரு ஏற் பாட்டைச் செய்ய ஏராளமான பிரயத்தனத்தைச் செய்கிறதென்று வெளியாகும் கட்டுக்கதைகள் உண்மைதானென்று சொல்ல இதிலிருந்து ஹேஷ்யமேற்படு கிறது.

நிற்க, அமெரிக்காவின் தலைவர் அமெரிக்காவிலுள்ள தொழிற்சாலைகளை அதிகமான பிரயத்தனம் செய்யத் தூண்ட துரந்தரராகயிருக்கிறார். இவ் விஷயத்தில் கொஞ்ச காலமாக நமது தேசத்தில் நமக்கு நன்றாய் வெளியாகி இருக்கும் பிரச்னைகள் யாவும் அமெரிக்காவிலும் கிளம்பியிருக்கின்றன. காலத்தை அதிகமாக வீண் போக்காமலும் மூலதனம் வைத்திருப்பவரையும் தொழிலாளர் களையும் அதிகமாகக் கட்டாயம் செய்யாமலும் அமைதியிருக்கும்பொழுது செய்யும் வேலையிலிருந்து யுத்த காலத்திற்குத் தேவையான தளவாடங்களைத் தயாரிக்க வேண்டி அதிக வேலை செய்யும்படி கட்டளையிடுவதும். இந்த விஷயத்தில் ப்ரஸிடெண்ட் ரூஸ்வெல்டுக்கு இரண்டு திறமை வாய்ந்த அதிகாரிகள் ஒத்தாசை செய்கிறார்கள். மிஸ்டர் நட்ஸன் என்ற ஒரு தொழிற்சாலை வைத்திருப்பவர்கள் வகுப்பைச் சேர்ந்தவரும் மிஸ்டர் ஹில்மான் என்ற தொழிலாளிகள் தலைவரும். இவ்விருவரும் தங்களுடைய அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் உள்ள ஜனங் களின் பூர்ண நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். இருந்தாலும் அமெரிக்காவி லுள்ள தொழிற்சாலைகளில் பெரும் பகுதியோர் யுத்த சம்பந்தமான தேவைகளை

உண்டு பண்ணுவதற்கு சம்மதப்படவில்லை. அமைதியிருக்கும் காலத்தில் உண்டாக்குவதைவிட யுத்தத்திற்காக துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கும் ஒப்பந்தம் ஒன்றும் பிரமாதமில்லையென்று அவர்கள் கருதுகிறார்கள். ஐக்கிய தேசங்களில் உள்ள அதிக மூலதனமுள்ள வர்த்தகர்களுங்கூட புது பிரயத்னங்களுக்குத் தேவையான முன்பணத்தைக் கொடுக்க சம்மதப்படுகிறார்களில்லை. இந்த யுத்தம் முடிவடையும்பொழுது இந்த அதிகமாகப்போட்ட தொகைகள் உபயோகமற்றதாகப் போய்விடக்கூடுமோ என்று அவர்கள் பயப்படுகிறார்கள்.

ராஜீயச் சிக்கல்களை அறிவதில் மிகவும் சமர்த்தனானபடியால் மிஸ்டர் ரூஸ்வெல்ட், தனக்குச் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய அல்லது தேவையானவைகளைக்காட்டிலும் அதிகமான அதிகாரங்களைத் தனக்கு அளிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார். அதன்மூலமாக அவசியமானவைகளைக் கைவிடாது கூடிய அளவு சகாயம் செய்ய அவருக்கு சந்தர்ப்பம் வாய்க்குமென்று நினைக்கிறார். ரொம்பவும் சாதுர்யமாக பாதுகாப்பு விஷயத்திலும் பிரிடனுக்கு உதவி அளிக்கும் விஷயத்திலும் அமெரிக்காவிலுள்ள பொது ஜனங்கள்தான் அவருக்குக் கட்டளையிடுகிறார்களென்று அவர் தோன்றும்படி செய்கிறார்.

## (II)

ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் உள்ள நட்பையும் வியாபார ஒப்பந்தத்தையும் மறுபடியும் அவர்கள் புதுப்பித்துக் கொண்டார்களென்பதில் அதிக விசேஷமிருக்கிறதென்று நம்முடைய நேயர்கள் நினைக்கவேண்டாம். இந்தச் செய்கை தற்கால நிலையை கொஞ்சமேனும் பாதிக்கக்கூடியதல்ல. 1939-ம் வருஷம் கோடையில் ஆதியில் ஏற்பட்ட ஒப்பந்தம் கையெழுத்தானபொழுது ஜெர்மானியருக்கு அதிலிருந்து இரண்டு லாபங்கள் கிடைத்தன. ஒப்பந்தத்தினால் மேற்கு ஐரோப்பாவிலும் சர்வதேசப் பொது உடைமைக் கொள்கையின் பறவுதல் ஏற்படக்கூடுமென்று ஒரு சிறு பகுதியோர் பயந்தார்கள். நாஸிகள் பிரசாரத்தின் பலனாக அவர்களில் பெரும்பகுதியோர் ஹிட்லருக்கு இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தியதில் பெரிய வெற்றி ஏற்பட்டுவிட்டதென்றும், இதன் பயனாக இரண்டு போர்முனைகளில் யுத்தம் செய்யவேண்டியதை ஜெர்மனி தடுத்துவிட்டதென்றும், மேற்கே உள்ள வல்லரசர்கள் நிச்சயமாகத் தோற்றுவிடுவதற்கு இது ஒரு அடையாளமென்றும் கருதினார்கள்.

ஒப்பந்தம் ஏற்பட்டுச்சென்ற ஒன்றரை வருஷங்களாக, ருஷ்யா ஜெர்மனிக்குக் கொடுத்த பொருளாதார உதவியைப்பற்றி ஜெர்மனி பூராவும் அதிருப்தி உண்டாகி இருக்கிறது. இந்த உதவியைப்பற்றி கிடைத்ததற்கு மிகவும் அதிகமாகவே ஜெர்மனிக்குப் பொருள்கள் அனுப்பப்பட்டிருக்கின்றதென்று நாஸித்தலைவர்கள் ஜெர்மானியர்களிக்கு வெளியிடுகிறார்கள். இம்மாதிரியான மோசமிருந்த போதிலும், ஒப்பந்தத்தை புதுப்பித்துக்கொண்ட விஷயத்தை ஜெர்மன் பத்திரிகைகள் குதூகலமாக வரவேற்கிறார்கள். ருஷ்யாவிலும் இதற்குக் கொஞ்சம் குறைவாக சந்தோஷப்படுகிறார்கள். ஸ்டாலின் சம்பந்தப்பட்டவரையில் அவன் காலஹரணம் செய்து வருகிறான். ருஷ்யா ஜனங்கள் யுத்தத்தில் சேரவிரும்பவில்லையென்று ஸ்டாலினுக்குத் தெரியும். ருஷ்யா எப்பொழுது பெரிய

யுத்தத்தில் இறங்குமென்று எதிர்பார்த்துக்கொண்டு எதிராளிக்கக்ஷியைச் சேர்ந்த கோஷ்டிகள் அநேகம் ருஷ்யாவில் இருக்கின்றன. அவர்கள் நல்ல தருணம் வாய்த்ததென்று நினைத்து ஸ்டாலினை அதிகாரத்தைவிட்டு விலக்கிவிட ஏற்பாடுசெய்து விடுவார்கள். ஆகையால் ஜெர்மனியைத் திருப்தி செய்யக்கூடிய போதுமான அளவு ஸகாயம் செய்து, கூடியவரையில் யுத்தம் செய்யாமலிருக்கவும், அல்லது தன்னாலியன்ற அளவு யுத்தத்தை விலக்கிவிடவும் ஸ்டாலின் எண்ணுகிறான். இவ்விதமாக ஜெர்மனிக்கு ருஷ்யா சொல்பமாக பொருளாதார உதவி கொடுத்து வருகிறது. இதே சமயம் தன்னுடைய தற்காப்புச் சாதனங்களையும் விருத்திசெய்கிறது. ப்ரசாரம் மூலமாகவும், தந்திரமாகவும், பால்டிக் சமுத்திரத்திலும், பால்கன் நாடுகளிலும் ஜெர்மானியர்கள் அதிகாரத்தைத் தடுப்பதற்கும் ருஷ்யா முயலுகிறது. "சர்வதேசப்பொது உடமைக் கொள்கையை உடைய நமது நாட்டின் பொருளாதார நிலைமையையும் ராணுவ பலத்தையும் அபிவிருத்தி செய்வதுதான் நம்முடைய முதன்மையானதும், முக்கியமானதுமான கடமை" என்று காலினின் என்பவர் ருஷ்யாவில் "மாறுதல்" (Revolution) நடந்த இருபத்தி மூன்றுவது வருஷாந்திரக் கொண்டாட்ட தினத்தன்று சென்ற அக்டோபர் மாதத்தில் பேசியிருக்கிறார்.

ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கும் கலவரத்திலிருந்து சாத்யமானவரையில் தனக்கு வேண்டிய சௌகரியங்களைக்கைப்பற்றி விடலாமென்றும் ஸ்டாலின் உத்தேசித்திருக்கிறான். இந்த யுத்தத்தின் பயனாக இருதரப்பாரும் சோர்வு அடைந்தால் ருஷ்யாவுக்குச் சாதகம். ஜெர்மனியின் எதிர்ப்பை பிரிடன் வெற்றிகரமாக தடுத்துவருகிறதென்பதிலிருந்தும், யுத்தத்தைப்பற்றி அமெரிக்காவின் அபிப்பிராயம் மாறுதலடைந்திருக்கிறதிலிருந்தும், ருஷ்யாவிலுள்ள ஜனங்களுக்கு நல்ல அபிப்பிராயம் உண்டாகியிருக்கிறதென்று ருஷ்யாதேசப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. மேலும் பர்மா ரஸ்தாவைத் திறந்துவிட்டதன் மூலம் ஐக்கிய நாடுகளும் பிரிடனும் சைன தேசத்தார்களுக்கு உபயோகமுள்ளபடி பகிரங்கமாக உதவி செய்வதைக் கவனித்து ருஷ்யாவும் சங்கிங் துரைத்தனத்தாருக்கு அதிகமான உதவி செய்ய ஆரம்பித்திருக்கிறது.

**"ருசிகண்ட பூனை உரியை உரியைத்தாவும்."** ஏற்கனவே சம்பவித்திருக்கும் தௌர்பாக்கியத்தை நோக்குங்கால் நாம் அதிகமாக லாபமடைவோம் என்ற எண்ணத்தைப்பற்றி ஜாக்கிரதையாகவே பேசவேண்டும். இதாலியத்துருப்புகளில் முக்கியமானவைகள் இப்பொழுது சண்டைசெய்ய முடியாமலிருப்பதைப் பார்த்தால், லிபியாவில் நடக்கும் யுத்தத்தில் இதாலிக்குச்சொந்தமான முழுப்பிரதேசத்தையும் பிரிடிஷார் ஆக்ரமிப்பது அசாத்யமான காரியமில்லையென்று நன்றாய்ச் சொல்லலாம். பிரிடிஷார் முதல் முதலில் எகிப்தில் எதிர்ப்பு யுத்தம் ஆரம்பித்த காலத்தில், ஸிதிபரானியிலிருந்த ராணுவ நிலையத்தையும் படைகளையும் தகர்த்தி எகிப்தில் இதாலியின்படை யெடுப்பு பயத்தை நிவர்த்திசெய்யும் நோக்கம் ஒன்றுதானிருந்தது என்று சொல்லலாம். இந்த நோக்கம் மிகவும் வெற்றிகரமாய் கைகூடிய பொழுது மேல்மேலும் வெற்றிபெற நம்பிக்கை உண்டாயிற்று. தங்களுக்கு

முதலில் கிடைத்த வெற்றியைப்பின்பற்றித் தாமதமன்னியில் மேன்மேலும் வெற்றிபெறும்படி ஏற்பாடு செய்திருக்கும் தளகர்த்தர் வேவலுடையவும் அவருடைய வேலைக்காரர்களுடையவும் புத்திசாலித்தனத்திற்கும், கௌரவத்திற்கும் சமானம் வேறு ஒன்றுமே கிடையாது.

---

## இதாலிய சமாதான முயற்சிகள்.
## இம்முயற்சிகளை ஏற்றுக்கொள்வதில் ஜாக்கிரதை அவசியம்.
## முஸோலினிக்குப்பதிலாக ஸ்தானம் வகிக்கக்கூடியவர்கள்.
## பிரதிநிதித்வம்கொண்ட கவர்ன்மெண்டுதான் ஷரத்துக்களை நிர்ணயிக்கலாம்.

(' நியூஸ்க்ரானிகிள் ' பத்திரிகையில் வெர்னன் பார்ட்லெட்டின் கட்டுரை.)

சென்ற சில காலமாக இதாலிக்கு அண்டை நாடாகிய ஸ்பெயின் மத்தியஸ்தத்துக்கு அழைக்கப்படலாமென்ற ஒரு வதந்தி உலாவியதால், லிஸ்பெனில் இருந்துவரும் இந்தப்பத்திரிகையின் நிருபர் இதாலி சீக்கிரத்தில் சமாதானம் கோரலாம் என்று எழுதியிருப்பது ஸ்வாரஸ்யமானது.

ஸ்பானிஷ் கவர்ன்மெண்டு ஜெர்மானியர்கள் அதை யுத்தத்திலிறங்கும்படி வற்புறுத்தியும் அதை காதில் போட்டுக்கொள்ளவில்லை.

பசி ஒருபுறம், ஐக்கிய அமெரிக்காவின் தீர்மானமானநிலை ஒருபுறம்,--இவற்ருல் ஸ்பெயின் தான் முதலில் கூறிய 'யுத்தத்தில் சேராத' நிலைமையிலிருந்து 'நடுநிலைமை'க்கே இறங்கிவிட்டது; ஆனதால் ஒரு மத்தியஸ்தத்துக்கு அது தகுந்த தேசம்தான்.

சமீபத்தில் இதாலி சரணடையும் என்ற வதந்திகளை ஜாக்கிரதையுடன்தான் ஏத்துக்கொள்ளவேண்டும் என்பதில் தடையில்லை. ஆனுல் இதுபோன்ற தோல்விகள் ஜெர்மனிக்கு நேர்ந்திருந்தால் அது பணிவதைகாட்டிலும் இதாலி பணிவதற்குப் போதுமான காரணங்கள் இருக்கின்றன.

## இல் த்யூசேயின் (முஸோலியின்) எதிரிகள்.

ஜெர்மனியில் நாஸி ஆட்சிக்குப்பர்த்தியாக வேறு ஆட்சி புலன்படவில்லை; இதாலியிலோ முஸோலினிக்கு உருவடைந்த பலமான எதிர்ப்பு, பாஸிஸத்துக்கு என்று இல்லாவிட்டாலும், முஸோலினிக்கு இருக்கிறது.

இதாலிய அரசனே முஸோலினியைப் பின்பற்றுகிறுரில்லை. சில தடவைகளில் பாஸிஸத்தின் அதிக்கிரமங்களை ஆட்சேபித்திருக்கக்கூடிய காலங்களில்கூட, நமக்கு என்ன வம்பு என்று நாணயங்களைச் சேர்ப்பதில் ஈடுபட்டிருப்பதுபோல் பாசாங்கு செய்திருக்கிறுர்.

இளவரசர் அரசனைக்காட்டிலும் ஆட்சேபித்திருக்கிறார்; ஆனால் அது போதாது.

அவனுடைய அத்தான் ட்யூக் ஆப் அயோஸ்டாவுக்கு ஜனங்களின் ஆதரவு ஜாஸ்தி. அவர் இப்பொழுது அபிஸீனியாவில் இருக்கிறார்; அங்கு அவருக்கு மூச்சுவிடமுடியாமல் தொல்லைகள் இருக்கின்றன. இருந்தபோதிலும் சமாதான முயற்சிகளில் இறங்கி, ஒரு மறு புரட்சியை ஏற்படுத்தக்கூடியவர்.

அவரை ஆதரிக்கக்கூடியவர்கள் மார்ஷல் படோக்ளியோ, உயர்ந்த ராணுவ உத்தியோகஸ்தர்களில் அநேகர், முன்பு லண்டனில் இதாலிய ஸ்தானிகராயிருந்த கவுண்ட் கிராண்டி.

## உஷாருக்குக் காரணங்கள்.

பாஸிஸ்டு தலைவர்களுடைய பதவிகளும்—ஏன், உயிர்களும்கூட—இப்பொழுதிருக்கும் பாஸிஸ்டு அரசியல் நிலைநிற்பதைப்பொருத்ததாயிருக்கிறது; ஆனதால், இதாலியன் ஜனங்கள் எக்கேடுகெட்டாலும் அரசியலை விடாப்பிடியாக பிடித்து நிலைநிறுத்த அவர்கள் முயலுவார்கள்.

ஆனதால்தான் சமாதான வதந்திகளை நாம் எளிதில் நம்பக்கூடாதென்பதற்கு இது ஒரு மூகாந்திரம். ஆயினும் இதே தலைவர்கள், லண்டனில் நன்கு பிரபலமான கவுண்ட் கிராண்டி போன்ற ஒருவர், தங்களுள் முழுமோசடியாக பாஸீஸத்தில் ஆழாதவர்கள் சம்பந்தப்பட்டவரை தங்கள் பதவிகளில் நீடிக்கக் கூடியவோ, அல்லது பின்நின்று சூத்திரதாரிகளாக இருக்கக்கூடிய, ஸ்தானங்களை வகிப்பது, என்ற நிபந்தனைகளை சம்பாதிக்கலாம், என்று அவர்கள் முடிவுக்கு வருவதும் சாத்தியம்.

இம்மாதிரி உசிதகாலத்துக்குமுன் இம்மாதிரியான வழிகளில் சமாதானத்தால் விளையக்கூடிய ஆபத்துக்கள் பிரிடிஷ் கவர்ன்மெண்டுக்கு நன்கு தெரியும்.

பாஸிஸம் தோல்வியை ஒப்புக்கொண்டு, முஸோலினி தேடிய சாம்ராஜ்ஜியம் நொறுங்கினால், தங்களுக்கு இவ்வளவு கஷ்டங்களை உண்டுபண்ணி, இவ்வளவு அரும்பெரும் தியாகங்களைக்கோரும் பாஸிஸ்டு கொள்கையை இதாலிய ஜனங்கள் வெறுத்து அதிலிருந்து எட்டித்திரும்புவார்கள். இதாலிய ஜனங்கள் எவ்வளவு தூரம் திரும்புவார்கள் என்பது நமது நேசதேசங்களின் புத்திசாலித்தனத்தைப் பொறுத்தது.

## மிதவாதிகள்.

கவுண்ட் கிராண்டி அல்லது 'மிதவாத' பாஸிஸ்டுகளால் ஏற்படுத்தப்படும் ஒரு கவர்ன்மெண்டு, வரப்போகும் வெள்ளத்தைத் தேக்கி அணைபோடமுடியுமா

என்பது சந்தேகம். இவர்களுடன் சமாதானத்துக்கு பிரிடிஷ் கவர்ன்மெண்டு இறங்கினால் பின்பு இதாலிய ஜனங்களுக்கு விரோதமாக ஒருக்கால் இவர்கள் கவர்ன்மெண்டை நிலைநிறுத்தவேண்டி வரலாம். இதனால் ஜனநாயகக் கொள்கைக்கே பொதுவாகப் பல தீங்குகள் விளையக்கூடும்.

ஒரு அபாயகரமான கோடியிலிருந்து மற்றொரு அபாயகரமான கோடிக்கு ஊசலாடாமல் இருக்கவேண்டுமானால், இவர்களுடையதைவிட பிரதிநிதித்வம் வாய்ந்த ஒரு பொதுப்படையான கவர்ன்மெண்டு அவசியம்.

இதாலி இம்மாதிரி சமாதானத்துக்கு ஊடாடுவது மத்தியதரைக் கடலில் ஜெர்மானியர்களை மூன்றில் ஒன்றைச் செய்யத் தூண்டலாம்.

(1) பால்கன்ஸ் வழியாக அவர்கள் இறங்கும் தேதியை முன்னுக்குக் கொண்டுவரலாம்.

(2) ஜெர்மனியைக்குறித்து மார்ஷல் பிடேயனின் கொள்கை என்னவென்பதைத் தெளிவுபடுத்தும்படி அவர்கள் வற்புறுத்தலாம்.

(3) ஏராளமான நாஸி விமானிகள் இதாலிக்கு பாதி, பாஸிஸ்டு அரசியலை வலுப்படுத்தவும், பாதி, உதவக்கூடிய விமானக் கொத்தளங்களைப் பிடித்துக் கொள்ளவும், அனுப்பப்படலாம்.

---

# கதம்பம்.

---

1. "உன்பக்கத்தில் வசிப்பவனுக்கு அன்புபாராட்டவேண்டுமென்று பொருள்படக்கூடிய கிருஸ்துவின் உபதேசத்துக்கு ஒவ்வாத யாதொரு உத்தரவையும் ஹிட்லர் பிறப்பிவித்திருக்கிறான் என்று ருசுப்பிக்கக்கூடிய ஒருவரையும் கண்டுபிடிக்க முடியாது."

(ஜெர்மானிய ஜனங்களுக்குச் செய்த ஒலிபரப்பு, டிஸம்பர் 10, 1940).

2. "பிரிடன் வெற்றிபெறப்போவது பிரமாணம் என்று நினைக்கிறேன்."

(மிஸ்டர் வெண்டல் வில்கி, ந்யூ யார்க், ஜனவரி 23).

3. "இந்தயுத்தத்தைப்பற்றி சரித்திரம் எழுதப்படும் காலத்தில் 1940-ம் வருஷ ஜுன் மாதத்திலேயே ஹிட்லர் தோற்றுவிட்டானென்று காணப்படும்."

(ஹாலிபாக்ஸ் பிரபு, வாஷிங்டன், ஜனவரி 25).

4. "உங்களிடத்தில் எனக்குப் பூர்ண நம்பிக்கை உண்டு. நீங்கள் செய்திருக்கும் அரிய வேலைகளையும், வருங்காலத்தில் நீங்கள் செய்யப்போகும் வேலைகளையும் நான் அறிவேன்."

(ஜெனரல் காஸல்ஸ், இந்திய சேனைத்தலைவர், இந்தியாவைவிட்டுப் போகும் சமயத்தில் இந்தியத் துருப்புகளுக்கு அறிவித்தது, ஜனவரி கடைசியில்).

5. "நம்முடைய வீட்டில் நாம் விளையாடிக்கொண்டிருக்கிறோம்."

(இரிட்ரியாவில் நடக்கும் யுத்தத்தைப்பற்றி ஒரு இந்திய ராணுவ உத்தியோகஸ்தர்).

6. "ஹிட்லர் இச்சமயம் அதிக பீதியடைந்திருக்கிறான். அபஜயம் வரப்போகிறதென்ற எண்ணம் அவனைக் கலக்குகிறது."

(மிஸ்டர் டப் கூப்பர், அறிக்கை மந்திரி, லண்டன், ஜனவரி கடைசியில்).

7. "ஆபிரிக்கா கண்டத்தில் ஜெர்மனி திரும்பிவருவதென்றால் ஆபிரிக்காவிலுள்ள எல்லா தேசங்களுடைய சுதந்திரத்துக்கும், பாதுகாப்புக்கும் நாசம் வந்துவிடும்."

(குடியேற்றநாடுகளின் பெல்ஜியன் மந்திரியான எம். டி. வ்ளீஸ்காவர், கேப்டவுன், ஜனவரி 27.)

8. "இங்கிருக்கும் ஜனங்களின் முகவிந்யாசம் மிகவும் அழகாயிருக்கிறது. ஒருவரையாவது திகிலடைந்தவராக நான் காணவில்லை."

(மிஸ்டர் வெண்டல் வில்கி, லண்டன், ஜனவரி 27.)

9. "இப்பொழுதும், எக்காலத்திலும் பிரெஞ்சு கப்பற்படை, பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கத்துக்குட்பட்டதாகத் தானிருக்கும். அது தன்னையும், சாம்ராஜ்ஜியத்தையும் எவ்விடத்திலிருந்தும், யாவரிடத்திலிருந்தும் ஏற்படக்கூடிய எதிர்ப்பிலிருந்து காப்பாற்றிக்கொள்ளும்."

(டார்லான், பிரெஞ்சு கடற்படை மந்திரி, விஷியில், பிப்ரவரி 2.)

10. "ஸமீப காலத்தில் சத்துருவானவன் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தை அழித்துவிட பலமான முயற்சி செய்வானென்று அறிகுறிகள் அநேகம் காணப்படுகின்றன."

(மிஸ்டர் மாகென்ஸி கிங், கனடாவின் மந்திரி, ஒட்டாவா, பிப்ரவரி 2.)

11. "செஞ்சிலுவை சேவைக்குப் பொருளுதவி செய்யும் காங்கிரஸ் கக்ஷியைச் சேர்ந்தவன் சட்ட வரம்பை மீறி நடந்தவனென்று நான் நினைக்கமாட்டேன்........."

(மிஸ்டர் காந்தி, வார்தாவில், பிப்ரவரி 5.)

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### மத்தியதரைக் கடற்கரை யுத்தத்தைப்பற்றி உளறல்.

ஆபிரிக்காவில் இதாலியர்களுக்கு ஆபத்து வந்துவிட்டதென்று இதாலியர் ஒப்புக்கொண்டாலும் ஜெர்மானியர் ஒப்புக்கொள்ளவில்லை. "ஆஸ்திரேலியா விலிருந்து வந்திருக்கும் துருப்புகள் எகிப்து மணலில் உட்கார்ந்திருந்தாலென்ன, ஸிதி-பரானி அல்லது டோப்ரூக் மணலில் உட்கார்ந்திருந்தாலென்ன. லிபியா வெற்றிகள் வெற்றிகளாகமாட்டா. பிரிடனுக்கருகாமையில் யுத்தம் நடந்த பிறகுதான் வெற்றியா அல்லது தோல்வியாவென்று தெரியும்," என்று சொல்லப் படுகிறது (ஸ்குரூடேடர்-ஜனவரி 22). இதெல்லாம் ஒன்றும் புதிதல்ல. இது, ஏற்கனவே மிஸ்டர் சர்ச்சில் முதலிய பிரிடிஷ் தலைவர்கள் கொடுத்திருக்கும் அபிப்பிராயம்தான். அவர்களுடைய அபிப்பிராயமென்று சொல்லாது, அதை அபகரித்து, ஜெர்மன் அபிப்பிராயமாகச் சொல்லப்படுகிறது. வேறொன்றுமில்லை. ஆனால், லிபியாவில் வரவர இதாலியர்களுக்கு நஷ்டமதிகமாய்க்கொண்டுவருவதை ஜெர்மனி குறைத்துக்காட்டுகிறது. லிபியாவின் கடற்கரை இதாலியின் நாலாம் கடற்கரையென்று இதாலி சொல்லிக்கொண்டிருந்ததற்கு ஜெர்மன் ஒலிபரப்பு விரோதமாயிருக்கிறது.

### துணையோடு வந்த வியாபாரக் கப்பல்கள் பத்திரமாய்ப் போய்ச்சேர்ந்தன.

மத்தியதரைக் கடலுக்குள் ஜெர்மன் விமானங்கள் வந்துவிட்டதாகவும், இவைகளில் இரண்டு படைகள் மறித்துவிட்டதாகவும், இனி வியாபாரக் கப்பல்களை இங்கிலாந்து இந்தக் கடலில் துணைக்கப்பல்களின் உதவியால் கொண்டு போக முடியாதென்றும் ஜெர்மனி பெருமையடித்துக்கொள்ளுகிறது. (ஸ்குரூடேடர்) ஆனால் இவ்வளவு பெருமைக்குக் காரணத்தைக் காணோம். இந்த ஜெர்மன் விமானங்களிருப்பதால் லிபியாவில் பிரிடிஷ்படை முன்னேறுவது சற்றும் குறையவில்லை. ஏற்கனவே 80 ஜெர்மன் விமானங்கள்—அதாவது, இரண்டு விமானப்படைகளுக்கதிகமாக மத்தியதரைக் கடலில் அழிக்கப்பட்டு விட்டன. ஜனவரி 10-ம் தேதி வந்த வியாபாரக் கப்பல்களும் பத்திரமாய் கிரீஸ் போய்ச்சேர்ந்தன.

இது உண்மையென்று 21-ம் தேதியன்று இதாலி ரேடியோ ஒப்புக்கொண்டு, ஆனால், பிரிடிஷ் உதவியன்றி கிரீஸ் தேசம் சண்டைசெய்ய முடியாதென்று அனு பல்லவி பாடி இகழ்ந்தது. மேலும், முன்னுக்குப்பின் விரோதமாக அதே செய்தியில், மற்றொரு பாகத்தில், பிரிடிஷ் உதவி போதவில்லையென்று கிரேக்கர்கள் குறை கூறுவதாயும் சொல்லிற்று.

## தோற்றதுமல்லாது, நொண்டிச்சாக்கு.

ஆபிரிக்காவில் இதாலிய ராஜ்யத்தின் தென்பாகத்தில் கஸாலாவென்ற இடத்திலிருந்து இதாலியர்கள் தோற்கப்பட்டு ஓடுகிறார்கள். இதை வேறொரு இடத்தில் சண்டை செய்வதற்காக, இந்த இடத்தை தாங்களே காலி செய்து விட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். (ஸ்டிபானி ஏஜென்ஸி நிருபர் சொன்னதாக பெர்லின் ரேடியோ—ஜனவரி 23). இதாலியர்கள் ஓட்டம் பிடிப்பது இன்னும் நிற்கவில்லை; ஆதலால் சேனைத்தலைவர்கள் கடைசியாய்ப் போய் நிற்குமிடத்தை இன்னும் நிர்த்தாரணம் செய்யவில்லையென்று வைத்துக்கொள்ள வேண்டும்.

## தொழிலாளர்களின் நிலைமை.—பிரிடனில்.

ஹாஹாப் பிரபு இப்பொழுது பிரிடிஷ் தொழிலாளர்களுக்கு நண்பராய் விட்டார். ஹிட்லரையும், ஹிட்லர் கணங்களையும் சம்காரம் செய்ய பிரிடிஷ் தொழிலாளிகள் தீர்மானம் செய்யச்செய்ய ஹாஹாவுக்குக் கோபம் மண்டிக் கொண்டு வருகிறது. இதற்காக பெருமுயற்சிகளைச் செய்யும் மிஸ்டர் பெவின் முதலியவர்கள்மேல் ஹாஹா தன் கோபத்தையெல்லாம் காட்டுகிறார். ஜெர்மனியின் தேசீய-சம-அரசியலின் ஏற்பாட்டையொத்து பிரிடனிலும் கட்டாயத் தொழிலை மிஸ்டர் பெவின் ஏற்படுத்தப் போவதாக ஜனவரி 22-ல் ஒலிபரப்பி, ஆனால், உள்ளபடி கட்டாயமென்பது ஜெர்மனியிலில்லையென்றும், அங்கே தொழிலாளிகள் உரிமைகளெல்லாம் பூராவாகக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்.

## தொழிலாளர்களின் நிலைமை.—ஜெர்மனியில்.

ஆனால், ஜெர்மனியில் தொழிலாளர் பாடு வெகு கஷ்டம். இதைப்பற்றி ஓடி வெளியேறிய ஜெர்மன் தொழிலாளர்களின் அத்தாக்ஷியிருக்கிறது. இதைக் காட்டிலும் ஜெர்மன் சுகாதார இலாகாத் தலைவரின் சாக்ஷி (1939-ல் சொன்னது) பொருத்தமாயிருப்பதால் அதை இங்கு எடுத்துச்சொல்லுவோம். 'இரவு பகலாக தொழிற்சாலைகள் நடப்பதாலும், அதற்காக, ஒரு தொழிலாளி ஓய்வு எடுத்துக் கொள்ளும்போது மற்றொருவன் வேலை செய்வதாலும், ஞாயிற்றுக்கிழமைகூட வேலை செய்வதாலும், மற்ற நாட்களில் அதிக நேரம் வேலை செய்வதாலும், தொழிலாளிகளின் பலம் குறைந்து, நோய் வாய்ப்பட்டு, ஜீரணசக்தி குறைந்து, நரம்பு வியாதிகளுக்கு இடம் கொடுக்கிறது. இதனால் சரீரத்தைக்கெடுத்து தொழில் நடக்கிறது' என்று இவர் பயந்து சொல்லியிருக்கிறார். இதுதான் ஜெர்மன் தொழிலாளிக்கேற்பட்ட உரிமை. ஜெர்மன் தேசத்தின் மத்திய பாகத்திலுள்ள சரியாயமைக்கப்பட்ட, பிறர் பார்த்துபின்பற்றக்கூடிய பட்டரை ஒன்றிருக்கிற தாம்: இதில், 75 வயதானவர்களை வேலைக்கு வைத்துக்கொண்டு வேலை வாங்கு கிறார்களாம்! இந்த சமாசாரம் நாஷனல்-ஸோஷலிஸ்ட-கக்ஷியின் ஸ்வாதந்திர அறிக்கையின் 1939-ம் வருஷத்திய 4-வது பாகம், 13-வது பகுதியில் கண்டிருக் கிறது.

## ஏய்ப்பதற்காகத்தான்.

'விமானப்போரில் தொழிற்சாலைகளைக் காப்பாற்றிக்கொள்ள பிரிடனுக்குத் தெரியவில்லை'யென்று ஜெர்மனி ஜனவரி 26-ல் ஒலிபரப்பியிருக்கிறது.

சென்ற வாரத்தில் பிரிடனைப் பார்த்துவிட்டு அமெரிக்காவுக்குத் திரும்பிய நியூ-யார்க்-பி-எம் பத்திரிகையின் நிருபரான பென் ராபர்ட்ஸன் ஜெர்மன் விமானங்களால் பிரிடிஷ் தொழிற்சாலைகளுக்கு அதிகப்பழுது ஏற்படவில்லையென்று எழுதியிருக்கிறார். கவென்டிரியைத் தாக்கியபோது நிருபர்களுக்கு வாய் பூட்டுபோட்டதற்குக் காரணம் சேதமதிகப்பட்டதினால் அல்ல. சேதம் குறைவாயிருந்ததால்தான். சேதமதிகமாயில்லாததைக்கேட்டு பகைவன் மறுமுறை வராதிருக்கத்தான் நிருபர்கள் செய்தியனுப்பாதபடி வாய் பூட்டுப் போடப்பட்டது.

கவன்டிரிக்குப் பிறகு, பர்மிங்காம், மான்செஸ்டர், பிரிஸ்டல், கார்டிப், ஸௌதாம்டன் முதலிய இடங்களில் ஜெர்மானியர்கள் வந்து கடைத்தெருவுகளில் குண்டுகளைப் போட்டிருக்கிறார்களேயொழிய ஊருக்கருகாமையிலிருக்கும் தொழிற்சாலைகளைப் பழுது செய்யவில்லை.

## இது வியாக்யானமில்லாமலே விளங்கும்.

'பிரிடிஷ் சாம்ராஜ்யமென்ற தெய்வத்துக்கு கிரேக்கர்கள் பலி கொடுக்கப்படுகிறார்கள். இப்பொழுதுதான் பிரிடிஷ்—முதலாளிகள் இவர்களுக்குச் சற்று உதவி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்' என்று ரோம் ரேடியோ-ஜனவரி 24-ல் ஒலிபரப்பியது.

# B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

## ஜெர்மனியின் புரட்சி.

'விமானப்போரால் வெற்றியடைய முடியுமென்றால், ஏற்கனவே நடந்திருக்கும் விமானப்போரிலேற்பட்டிருக்கும் அனுபவத்திலிருந்து, பிரிடிஷ் சாம்ராஜ்யம் நிலைப்பது கஷ்டமென்று நினைக்கவேண்டியிருக்கிறது' என்று சாட்பீல்ட் பிரபு ஜனவரி 21-ல் இந்துஸ்தானியில் ஒலிபரப்பியதாக, அதற்கு மறுநாள் ஜெர்மனி ஒலிபரப்பியது. இது தப்பிலி ரிபோர்ட். 'அடிப்படையான சில காரணங்களைக் கொண்டு நான் சொல்லுகிறேன். கடல் ஆதிக்கமானது கப்பல் பலத்தைப் பொருத்தது. இனியும் அப்படியேதானிருக்கப்போகிறது. இதுவே இது வரையில் நடந்த இந்த யுத்தத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடியது. நம்முடைய சாம்ராஜ்யம் பலமாய் அமைக்கப்பட்டிருக்கிறது. இதை ஏற்படுத்தியவர்கள் வீரத்தோடு சண்டை செய்தபடி இப்பொழுதும பிரிடிஷ் மக்கள் வீரமாய்ச் சண்டை செய்தால், கேவலம் விமானப்போரால் சாம்ராஜ்யம் அழியாது' என்றுதான் சாட்பீல்ட் பிரபு சொன்னார்.

ஜெர்மனியைப்போல, இதாலிய ரேடியோவும் ஜனவரி 22-ல் அராபியில் இது விஷயமாய்ப் பொய் சொல்லியிருக்கிறது. கப்பற்படையின் பெரிய அம்ச மாகிய ஸௌதாம்ப்டன் முதல் முதலாகப் பகைவனால் அமிழ்த்தப்பட்டது என்று இதாலி ஒலிபரப்பியது. உண்மையில், யுத்தமாரம்பித்தது முதல், விமானங்களால் கவிழ்க்கப்பட்ட முதல் பெரிய கப்பல் ஸௌதாம்ப்டன்தான்.

## ருமேனியாவில் ஜெர்மன் ஆதிக்கம்.

அந்நிய தேசங்களை நிரந்திரமாக ஆளுவதற்காக பிரிடன் இப்பொழுது சண்டை செய்கிறதென்று ருமேனியத் தொழில் மந்திரி சொன்னதாக ஜனவரி 20-ல் ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது. அவர் இப்படிச் சொன்னதும், சொல்லாததும் நமக்குத் தெரியாது. சொல்லியிருந்தால் இப்பொழுது ருமேனியா ஜெர்மனியின் கையில் அகப்பட்டுக்கொண்டு முழிப்பது என்னவென்று பார்ப் போம். ருமேனியாவின் எல்லைப்புறங்களைப் பிடுங்கிப் பிறருக்குக் கொடுத்தாய் விட்டது. ஜெர்மன் துருப்புக்களைப் போஷிக்க தினசரி 30,000 பவுன் ஜெர்மனிக்குக் கொடுக்கப்படுகிறது. பொழுது விடிந்தால் உள்நாட்டுக் கலகமும், கொலைகளும்தான்.

---

# ஸெயிண்ட் ஜான்ஸ் சங்கமும், ரெட்கிருஸ் சங்கமும் சேர்ந்து உழைக்கும் பகுதி தொடர்ச்சி.

## கைப்படச் செய்யும் பணிவிடைகள்.

பின்னுவதும் ஆடைகள் தைப்பதையும் தவிர, வியாதிப்பட்டவர்களுக்கும் காயப்பட்டவர்களுக்கும் கைப்பட தொண்டூழியம் செய்ய விரும்பி நம்மில் அநேகர் ஏங்கி நிற்கலாம். நாம் நினைப்பதற்குள் அத்தருணம் வாய்க்கலாம் என்பதில் சந்தேகமில்லை. அகில இங்கிலாந்திலோ—கிரேட் பிரிடன்—இப்பாக்கியம் பெற்றவர் அநேகருள்ளார். சுயேச்சையாய் சம்பளமில்லாமல் ரெட்கிராஸ் சங்கத்திலேயே உழைப்பவர் அநேகம். இவர்கள் இங்கிலாந்து முழுவதும், புறதேசங்களிலும் சென்று உழைக்கத் தயாராக இருக்கின்றனர். தேர்ச்சி பெற்ற அங்கபாலிகை களும்—ட்ரெயின்ட் நர்ஸஸ்—'சுயேச்சையாய் பணிவிடைகள் புரிவார்' என்ற பகுதியாரும் இவர்களின் முதன்மையானவர்கள். இவர்கள் நாள் முழுவதும் இரவிலும் உழைக்க வாக்களித்தவர். அவர்களை அவசரத்திற்கேற்கத் தொண்டு புரிய விடுவார்கள். வியாதியஸ்தர்கள் இளைப்பாறும் விடுதிகளிலும், ரெட்கிருஸ் சங்கத்தார் நடத்தும் உதவி வைத்தியசாலைகளிலும், மேற்கூறிய பணிப்பெண்களைக் காணலாம். தேசிய சுகாதார மந்திரி இலாகாவிலிருந்து 25,000 படுக்கைகள்

தயாரிக்கும்படி கேட்டு வந்திருக்கிறது. அப்போது, அவைகளில் கிடத்தப்படும் வியாதியஸ்தருக்கு சிகிச்சை முறையான தொண்டுகளுடன், அவர்கள் சுகத்திற்குறிய மற்றும் அநேக ஊழியங்களும் ஏற்படும். அநேக பெரிய மனிதர் வீடுகளை, மனப்பூர்வமாய் விட்டு, ஆஸ்பத்திரிகளாக்கி இருக்கின்றனர். அவசியமான சகலவேலைகளைச் செய்யவும் தானாக உழைப்பவர்க்கு சிலாக்கியம் கிடைக்கிறது. பெருக்கி சுத்தம் செய்யவும், துணிமணிகளை வெளுத்து சுத்தப்படுத்தவும், பிணியாளிகளின் ஆகாரம் தயாரிக்கவும், சமையல் செய்யவும், தோட்ட வேலை செய்யவும் இவர்கள் மனமுவந்த சேவை அவசியம். நோயாளிகளுக்கு மட்டுமல்ல, சுகமடைந்து வருபவர்க்கு விநோத விளையாட்டுகள் தயாரிப்பதிலும், வாசிக்க விரும்புவோருக்கு அரிய, பெரிய புத்தகங்கள், பத்திரிகைகள் கொடுப்பதும் 'தன்னிஷ்டமாய் பணிசெய்யும் இயக்கத்தில்' உள்ள பெண்கள் செய்து வருகிறார்கள்.

வியாதியஸ்தர், காயப்பட்டவர்களைக் கொண்டு வரும் கப்பல்களுக்கு 'ஆஸ்பத்திரி கப்பல்கள்' என்று பெயர். இப்படிப்பட்ட கப்பலில் அங்கபாலிகைகளும், வி.ஏ.டி. பெண்களும் உதவி செய்கிறார்கள். பிளாண்டர்ஸில் நேரிட்ட பின்னடைவில், குண்டுபட்டு வீழ்ந்த ஒரு வாலிப வீரன், சென்னையிலுள்ள தன் தங்கைக்கு பின்வருமாரு எழுதினான்.

'மயக்கம் தெளிந்து எழுந்ததும், கண் விழித்துப் பார்த்தேன். ஆஸ்பத்திரி கப்பலில் கிடைத்திருந்த வசதி ஸ்வர்க்கமோ என்று நினைக்கும் படியாயிருந்தது. அதில் எங்களை பராமரிக்கப்பெற்ற பாக்கியவாட்டி, சகல வசதிகளும் நிறைந்த, பெரிய லண்டன் ஆஸ்பத்திரியில் நடத்துவது போல், அவ்வளவு சகஜமாய்த் தன் பணிவிடைகளைச் செய்து, எங்களை அத்தனை அருமையாகவும், அமைதியாயும், கிடத்தி வைத்தாள். நரக வேதனை பட்டு வந்த எனக்கு, ஸ்வர்க்கத்திற்கு ஏறிச் சென்றது போல் தெரிந்தது அப்போ.'

எத்தனையோ அங்கபாலிகைகள், தம் உயிரை பொருட் படுத்தாமல், அமெரிக்காவிற்குக் கொண்டு போகப்பட்ட குழந்தைகளுடன் கப்பல்களில் முகமலர்ச்சியுடன் போனார்கள்.

புகலிடம் புகுவோரை, ஏற்றியனுப்பும் துறைகளிலும் அவர்கள் சென்று தொண்டுபுரிகிறார்கள். விமானக் குண்டுவீச்சுக் கொதுங்கும் மறைவிடங்களுக்கு, எடுத்துச்செல்லும்படி, கொஞ்சமும் அசைக்கப்படாத படுகாயம் பட்டுக் கிடப்பவர்களுக்கு, வீழ்ந்த இடத்திலேயே மருந்துகள் கொண்டு போய், ரணவைத்தியமோ, ஔஷத பாகமோ செய்ய வேண்டியிருப் போருடன், தம் உயிரைக் கொஞ்சமும் நினையாமல், தங்கி, பரிகாரம் செய்வதுவும் இவர்களே. ஓட்டிச் செல்லக் கூடிய வாகன வைத்திய சாலைகளிலும், பெயர்த்துக் கொண்டு போகும் வைத்திய சாலைகளிலும், இவ்விதமே இப்பெண்கள் உழைக்கின்றனர். அவர்கள் மார்பில் அணியும் 'சிகப்புச் சிலுவை'யே இவர்கள் அங்கபாலிகை பயிர்ச்சி பெற்றவர்கள் என்றும், க்ஷணப்பொழுதில் உதவி செய்வார்கள் என்றும் காட்டும் அடையாளம்.

சம்பளமின்றி, உதவி வேலே செய்யும் அநேகர், பெரிய ரெட் கிருஸ் ஸ்தாபனத்தில் பணியாற்றுகின்றனர். அவர்கள் வேலே விவரமும் அதிகச் சிறந்தது.

காணுமற் போனவர்கள் என்று குறிப்பிட்டவர்களேயும், காயப்பட்டு விட்டனர், என்பாரையும் பற்றிய ஊழியம் இது.

பெரிய முகவுரை பிரகாரமே, இனஜனத்தாரின் கவலேயை மாற்றி அவர்கள் மனமுடைக்கும் கேள்விகளுக்கு, விடையளிப்பதுவே இந்தப் பகுதியினர் வேலே. மகா கஷ்டமானதென்று சொல்ல அவசியமில்லே.

பிரான்ஸிலும், பிளாண்டர்ஸிலும் விடப்பட்டுப் போன அநேகரை இன்னமும் காணுமற் போய்விட்டனர் என்று நினேக்க வேண்டியதிருக்கிறது. நாளுக்குநாள் சிலர் காயப்பட்டு ஆஸ்பத்திரிகளிலே கண்டு பிடிக்கப் படுகிருர்கள். மற்றும் மனிதரைக் குறித்து ஆஸ்பத்திரியிலிருப்பவர் வாய்ப் பேச்சிஞல் சில விவரங்கள் தெரிய வருகிறதாம். இந்த வேலே செய்யும் அநேகர் லாயர்களாம். அது மிகவும் நல்லதே. ஏனென்ருல் குறிப்புகளேக் கவனித்து ருசுப்படுத்துவது அவர்களுக்கு எளிதில் கூடும். இப்படி தவறி பிரிடிஷ் ஆஸ்பத்திரியிலிருப்பவர்களேத் தேடி வருகிறவர்கள் பிரெஞ்சு அல்லது பெல்ஜியம் பேசுகிறவர்களாயிருக்க வேண்டியதவசியம். பிரிடிஷ் ஆஸ்பத்திரியில் கிடைக்காத சமயம், அப்படிப் பட்டவர்களேக் குறித்து, ஜெனிவாநகர் சர்வராஜ்ஜிய ரெட்கிருஸ் சங்கத்தினருக்குத் தெரிவித்து எத்தனேயோ பெயர்களுடைய இனத்தாரைக் கண்டுபிடித்துச் செய்தி அனுப்பியிருக்கிருர்கள். நம் ஆஸ்பத்திரிகளிலேயே மிகவும் அபாயமான நிலமையில் இருப்பவர்களுடைய நெருங்கிய பந்துக்களுக்கு ஜெனிவா சங்கத்தார் மூலமாய் தகவல் அனுப்பி விடுகிருர்கள்.

லண்டன் பட்டண ரெட்கிருஸ் சங்கத்தினர் உத்தரவுப்படி, ரெட்கிருஸ் அங்கத்தினர் ஒருவர், சொந்தக்காரரை நேரே பார்க்கவும், தந்தி மூலமாய் உத்தரவுபெற்று அப்படி இனத்தாரைக் கொண்டு வந்து நோயாளியுடன் சேர்க்கிருர்கள். வரமுடியாத ஏழைகளுக்கு, ரயில்வே, பாதி பணம் எடுக்கிறது. மீதி செலவை ரெட்கிருஸ் சங்கத்தாரும் கொடுப்பதுண்டு. இப்படிப்பட்ட சேவையை நன்றியுடன் சகலரும் அங்கீகரிப்பது ஆச்சரியமா. விமானப்படை குண்டு வீச்சிஞல், கஸ்தியடைவோர்க்கும் இப்பொழுது, இவ்வித உதவி செய்கிருர்கள்.

சென்ற ஜூன் மாதம் இவர்களின் திறமையை கடைசிவரை பரிசோதிக்கும் காலமாயிருந்தது என்னலாம். பந்துமித்திரர் தமது உறவினரை விசாரித்து மட்டும் 10,000 கடிதங்களுக்குமேல் வந்தன. மேலும் நேரில் வந்து விசாரித்தவர்களும் அநேகர். இந்த ஸ்தாபனம் தினம் காலே 9 மணி முதல் மாலே 9 மணி வரையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கும். மாட்சிமைதங்கிய மகாராணியவர்கள், இந்த ஸ்தாபனத்தைப் பார்வையிட வந்த சமயம், இனத்தார் சுகசெய்தி

கேட்கவந்திருந்தவர்களிடம் தாமே பேசி, ஆறுதலளித்தார்கள். தாய்மாருடன் வந்துவிடும் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருக்கும்படி வைத்துள்ள அழகிய எண்ணிறந்த விளையாட்டுச் சாமான்களைப் பார்த்து அகமகிழ்ந்தனர். மகாராணியார் பாராட்டின இரக்கமான அன்பினுல் அநேகர் திருப்தியும் சந்தோஷமும் அடைந்தனர். தம் பகல் வேலையை முடித்த அநேக கிளார்க்குகள் தம் வேலை முடிந்ததும், பதிவு செய்யும் பகுதிக்கு வந்து இரவு வெகு நேரம் வரையும் குறிப்பு எழுதுவதில் உதவிபுரிந்தனர். இப்படி இவர்கள் உதவி செய்வதால் பதிவு செய்யும் பிரிவின் வேலை சுருக்காய் முடிய ஏதுஉண்டாயிற்று.

ஆனுல் ஒருவரும் ஒருக்காலும் ரெட்கிருஸ் சங்க உழைப்பிற்காக நேரமோ, முயற்சியோ, செலவழிப்பதில் பின்வாங்க மாட்டார்கள்.

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XXX.

| 1941— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| பிப்ரவரி | 8, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலே | 6.30 |
| | 9, | ஞாயிற்றுக்கிழமை. | கோட்டைக்காடு ... | காலே | 9.45 |
| | | | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | மாலே | 5.00 |
| | | | பூவரசகுடி ... | ,, | 5.30 |
| | 11, | செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலே | 10.25 |
| | | | ராணி பெண்பாடசாலே... | ,, | 10.25 |
| | | | நச்சாந்துபட்டி ... | மாலே | 5.30 |
| | | | திருமயம் ... | ,, | 5.30 |
| | | | காரையூர் ... | ,, | 5.30 |
| | 12, | புதன்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலே | 10.25 |
| | | | கரம்பக்குடி ... | மாலே | 5.30 |
| | 13, | வியாழக்கிழமை ... | குடுமியாமலே ... | ,, | 5.30 |
| | | | குழிபிரை ... | ,, | 5.30 |
| | 14, | வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலே | 10.00 |

## பிரஸங்கம் XXXI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 15, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலே | 6.30 |
| | 16, | ஞாயிற்றுக்கிழமை. | ஆலூர் ... | காலே | 9.45 |
| | | | திருக்கோகர்ணம் ... | மாலே | 5.30 |
| | 17, | திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலே | 10.25 |
| | | | ராணி பெண்பாடசாலே... | ,, | 10.25 |
| | | | ராமச்சந்திரபுரம் ... | மாலே | 5.30 |
| | | | வேந்தம்பட்டி ... | ,, | 5.30 |
| | 18, | செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலே | 10.25 |
| | | | கொப்பனுபட்டி, பெண்பாடசாலே | மாலே | 5.30 |
| | | | ஆலங்குடி ... | ,, | 5.30 |
| | 19, | புதன்கிழமை ... | ராங்கியம் ... | ,, | 5.30 |
| | | | ஆதனக்கோட்டை ... | ,, | 5.30 |
| | 20, | வியாழக்கிழமை ... | விராலிமலே ... | ,, | 5.30 |
| | 21, | வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலே | 10.00 |

# முக்கியமான விளம்பரம்.

பிரிடிஷ் அரசாங்கத்தார் தயாரித்த
கியாதிபெற்ற

## "எச்சரிக்கை"

என்ற

**யுத்த சம்பந்தமான பிலிம்**

(2,000 அடி நீளமுள்ளது)

புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கீஸில்
பிப்ரவரிமீ 8-ம் தேதி முதல் ஒரு வாரம்
காண்பிவிக்கப்படும்.

புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம் இதை
ஜனங்களுக்குச் சிபார்சு செய்கிறது.

இப்படம் புதுக்கோட்டையிலுள்ள
ஒவ்வொருவராலும்
அவசியம் பார்க்கப்படவேண்டியது.

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—8-2-41.